வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 06 | 21.09.2025 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 264 | பக்கங்கள் : 16

# இரு மாகாண சபைகளும் மாற்றுக் கட்சிகளிடம் வீழ்ந்தால் தமிழ்க் கட்சிகள் கடை மூடும் நிலை!

## செல்வம் அடைக்கலநாதன் எச்சரிக்கை

- குமார கோகுலன் -

வவுனியா, செப். 21

வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் மாற்றுக் கட்சிகளின் அதிகாரங்களுக்குள் செல்லும் வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் தமிழ் தேசியத்தைப் பற்றி பேசும் தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டுச் செல்லும் நிலை ஏற்படும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

வவுனியாவில் அமைந்துள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபை தேர்தலை நடத்த வேண்டும் என்று 15



## சொத்து விவரம்: கால அவகாசம் கோரியுள்ள சஜித்

கொழும்பு, செப். 21


எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தனது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடனத்தை டிஜிற்றல் வடிவத்தில் சமர்ப்பிப்பதற்கு கால அவகாசம் கோரியுள்ளார்.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக் குழுவிடம் கடிதம் மூலம் 15

# அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையும் தருணம் இது!

## அழைக்கிறார் ரணில் விக்கிரமசிங்க

என்னைக் கைது செய்தமை மூலம் எதிர்க்கட்சிகளை அச்சுறுத்துவதற்கு அரசு முயற்சி என்றும் அவர் சாடல்



கொழும்பு, செப்ரெம்பர் 21

**அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்கவேண்டிய தருணம் இது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழா அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொழும்பில் நேற்று நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகளும் கலந்து கொண்டனர்.

இந்த விழாவில் உரையாற்றும்போதே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

சாதாரண மக்களும் ஜனாதிபதியாக முடியும். அப்படிதான் ரணசிங்க பிரேமதாஸ, மைத்திரிபால சிறிசேன மற்றும் அநுர குமார திஸாநாயக்க ஆகியோர் ஜனாதிபதிகளாகத் தெரிவாகினர்.

எமது நாட்டில் நீண்டகாலமாகப் பல கட்சி ஆட்சி முறை உள்ளது. அதனை ஒழிக்க இந்த அரசு முற்படுகின்றது. அதற்கு இடமளிக்க முடியாது.

அனைத்து 15



## திலீபனின் ஆவணக் காட்சியகம் நேற்று நல்லூரில் திறந்துவைப்பு

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப். 21

தியாக தீபம் திலீபனின் வரலாற்றை எதிர்காலச் சந்ததியினருக்கு கடத்தும் வகையில் “பார்த்தீபன் திலீபனாக! திலீபன் தியாக தீபமாக!!” எனும் தொனிப்பொருளுடன் கூடிய ஆவணக் காட்சியகம் நேற்று நல்லூரில் திறந்து வைக்கப்பட்டது. 15

## ஜனாதிபதி, பிரதமர் பங்கேற்கும் நிகழ்வுகளுக்கு அதிக பாதுகாப்பு

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளின் போது, அதிக பாதுகாப்பு மற்றும் எச்சரிக்கையுடன் செயல்படுமாறு அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி களுக்கும் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய உத்தர விட்டுள்ளதாக தகவல் 15

## ராஜபக்ஷ அத்தியாயம் மீண்டும் ஆரம்பிக்காது!

### கூறுகிறார் லால்காந்த



கொழும்பு, செப். 21

ராஜபக்ஷக்களின் அரசியல் கதை இந்நாட்டில் முடிந்துவிட்டது. அவர்களால் இங்கு மீண்டுமொரு அத்தியாயத்தை ஆரம்பிக்க முடியாது.” - என்று அமைச் சர் லால்காந்த தெரிவித்தார்.

மகிந்த சூறாவளி தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு 15

## ஐ.நா. பொதுச் சபையில் அநுர புதன்கிழமை உரை

கொழும்பு, செப். 21

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் 79ஆவது கூட்டத்தொடரில் எதிர்வரும் புதன்கிழமை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உரையாற்றவுள்ளார்.

ஐ.நா. வெளியிட்ட திருத்தப்பட்ட தற்காலிக பேச்சாளர்களின் பட்டியலின்படி, குறித்த தினத்தில் ஜனாதிபதி பிற்பகல் அமர்வில் உரையாற்றவுள்ளார்.

எதிர்வரும் 23 முதல் 29 ஆம் திகதிவரை இந்த கூட்டத்தொடர் நடைபெறவுள்ளது. 15

## அரசாங்க ஊழியர்களுக்கு ஜனவரியில் சம்பள உயர்வு

கொழும்பு, செப். 21

எதிர்வரும் ஜனவரி மாதம் அனைத்து அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு வழங்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, சிவில் விமான போக்குவரத்து மற்றும் போக்குவர்த்து அமைச்சர் 15

## நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை உடனடியாக அரசு நீக்கவேண்டும்

### சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, செப். 21

தற்போது நடைமுறையில் உள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நீக்குமாறு அல்லது சகல தரப்பினரதும் பங்கேற்புடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளுக்கு அமைவாக அச்சட்டத்தை திருத்தியமைக்குமாறு சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழுவினால் 15

## கொழும்புத்துறையில் போதைமாத்திரையுடன் மூன்று பேர் கைது

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியில் போதை மாத்திரைகளுடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் பொலீஸ் பிரிவுக் குட்பட்ட கொழும்புத்துறை பகுதியில் இது 15

## ஐ.தே.க.வுக்கான வாழ்த்து செய்தியிலும் ஒன்றிணைவை வலியுறுத்தினார் சஜித்!

கொழும்பு, செப். 21

ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு நிறைவுக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் சேவை அளவிட முடி யாதது. இன்று இலங்கையில் ஜனநாயகத்தைப் பாதுகாக்க அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

சஜித் பிரேமதாஸ தனது வாழ்த்துச் செய்தியில், ஐக்கிய தேசியக் கட்சியின் வரலாற்றுப் பங்களிப்பை எடுத்துரைத்தார்.

இலங்கையின் சுதந்திரப் போராட்டத்துக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரத்தை மட்டும் வைத்து வறுமையை தீர்மானிக்க முடியாது

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன்



யாழ்ப்பாணம், செப். 21

நாட்டில் பொருளாதாரத்தை மட்டும் வைத்து வறுமையை தீர்மானிக்க முடியாது என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

பிரஜா சக்தி வறுமை ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் திணைக்கள தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில், தலைமை உரையாற்றிய அரச அதிபர் மேலும் கூறுகையில்,

"ஜனாதிபதி செயலகத்தால் மூன்று வகையான கொள்கை பிரமாணங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. அதில் முதலாவதாக தூய்மை இலங்கை திட்டமாகும். இந்தத் திட்டங்களின் ஊடாகவே அரசாங்கம் இப்போது செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இரண்டாவதாக பிரஜா சக்தி காணப்படுகிறது. மூன்றாவதாக டிஜிற்றல் சிறீலங்கா உடன் சேர்ந்ததாக டிஜிற்றல் அரசுத் தொகுப்பு காணப்படுகிறது. இவ்விரண்டும் திட்டங்களும் தற்போது அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. ஜனாதிபதி செயலகம் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு இது தொடர்பான போதுமான தெளிவூட்டல்களை வழங்கி மாகாண மற்றும் மாவட்டங்களில் இந்தச் செயல்பாடுகளை முன்னெடுக்க விரும்புகிறது. "வளமான நாடு அழகான வாழ்க்கை" என்ற தொனிப்பொருளில் இந்த பிரஜா சக்தி செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. பொருளாதாரத்தை மட்டும் வைத்து வறுமையை தீர்மானிக்க முடியாது. அதனோடு இணைந்ததாக கல்வி, சுகாதாரம், சிறந்த வாழ்க்கைத்தரம், மனப்பாங்கு போன்றன முக்கியமான கருப்பொருளாக உள்ளன. யாழ்ப்பாணம் மாவட்டத்திலே இந்த பிரஜா சக்தி செயல்திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் வறுமை ஒழிப்பு செயல்திட்டத்தை ஒன்றிணைந்து செயல்படுத்த முடியும். பிரதேச, கிராம மட்ட உத்தியோகத்தர்கள் மட்டுமன்றி அனைவரும் ஒன்றிணைந்து இந்த வறுமை ஒழிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். வறுமை ஒழிப்புத் திட்டத்தை முற்றாக ஒழிக்க முடியாவிட்டாலும் அதனைக் குறைத்து கொள்ளக்கூடிய ஏதுநிலை உருவாகும்"- என்றார்.

இதன்போது சமூக வலுவூட்டல் மூலம் வறுமை ஒழித்தல் என்னும் தொனிப்பொருளில் இவற்றை செயல்படுத்தவுள்ள சமூக அபிவிருத்திக் குழுவின் சட்ட அடிப்படை, ஆக்க அமைவு, ஸ்தாபிப்பு மற்றும் பணிகள் தொடர்பில் விரிவாக விளக்கமளிக்கப்பட்டன. இதன் வளவாளராக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் திருமதி சாரதாஞ்சலி மனோகரன் கலந்து கொண்டார்.

குறித்த வேலைத்திட்டம் வறுமையை ஒழித்து நாட்டு மக்களை அனைத்து வகையிலும் வளமான மனிதர்களாக மாற்றியமைக்கும் நோக்கில் "செழுமையான தேசம் பசுமையான வாழ்க்கை" எனும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

மேலும், குறித்த செயலமர்வு சம நேரத்தில் சிங்கள மொழி மூலமாக மாவட்ட செயலக திட்டமிடல் கிளையில் நடைபெற்றது. (எ)

# கடற்படையினர் தினம்தோறும் தண்ணீர் எடுப்பதால் பாதிப்பு

யாழ்ப்பாணம், செப். 21

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு முன்பாகவுள்ள வீதியில் அமைந்திருக்கும் முன்பள்ளி வளாகத்தில் உள்ள கிணற்றிலிருந்து கடற்படையினர் தினமும் தண்ணீரை எடுத்துச் செல்கின்றனர். இதனால், தண்ணீர் வளம் பாதிக்கப்படுவதாக வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உறுப்பினர் ஐ. நாகரஞ்சினி சுட்டிக்காட்டினார்.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் தவிசாளர் ச. ஜயந்தன் தலைமையில் நடைபெற்றது. இதன்போதே அவர் இந்த விடயத்தை சுட்டிக்காட்டினார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்

வலிகாமம் மேற்கு பிரதேசத்துக்கே தண்ணீர் பற்றாக்குறை பிரச்னை காணப்படுகின்றது. பிரதேச சபையால் மக்களுக்கு கொடுப்பதற்கே தண்ணீர் போதாமல் இருக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் கடற்படையினர் ஊருக்குள் வந்து தினமும் 10 ஆயிரம் லீற்றர்களுக்கும் அதிகமான தண்ணீரை எடுத்துச் செல்கின்றனர்.

இவ்வாறு தினமும் அதிகளவான தண்ணீரை எடுத்து செல்வதால் வளம் பாதிக்கப்படுகிறது. அந்த தண்ணீரை இனிமேல் கடற்படையினர் எடுப்பதற்கு அனுமதிக்கக் கூடாது என்பதனை எனது பிரேரணையாக முன்வைக்கிறேன். எனவே, இந்த விடயம் குறித்து உரிய கடற்படை முகாமுக்கு பொறுப்பான அதிகாரிக்கு பிரதேச சபையால் கடிதம் அனுப்ப வேண்டும் - என்றார். (எ-05)

# மருத்துவரைத் தாக்கிய மூவருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், செப். 21

உரும்பிராய் பகுதியில் வைத்து மருத்துவர் ஒருவரை தாக்கிய மூவருக்கு விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 17 ஆம் திகதி இரவு மருத்துவர் ஒருவர் உரும்பிராய் சந்தியில் பயணித்துக் கொண்டிருந்தபோது அவர் மீது ஒரு குழுவினர் தாக்குதல் நடத்தினர். பின்னர் குறித்த மருத்துவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இவ்வாறான சூழ்நிலையில் தாக்குதலை மேற்கொண்ட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களை நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை அவர்களை நாளை திங்கட்கிழமைவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (எ-05)

# மீன்குஞ்சு வளர்ப்பு தடாகம் செட்டிக்குளத்தில் திறப்பு



வவுனியா, செப். 21

வவுனியா, செட்டிக்குளத்தில் 20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட மீன்குஞ்சு வளர்ப்பு தடாகம் கப்பாச்சி மீனவச் சங்கத்திடம் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்கவால் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

நன்னீர் மீன் உற்பத்தி மற்றும் மீன்பிடி என்பவற்றை ஊக்குவிக்கும் நோக்கில் 2025 ஆம் ஆண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் நிதி திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நன்னீர் மீன் வளர்ப்பு தடாகங்களை உருவாக்கி மீன்குஞ்சுகளை விடுவதற்கு செட்டிக்குளம், முகத்தான்குளம் - கப்பாச்சி மீனவச் சங்கத்துக்கு 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருந்தது.

குறித்த நிதியில் அமைக்கப்பட்ட மீன் வளர்ப்பு தடாகம் மீனவச் சங்கத்தினரிடம் கையளிக்கப்பட்டதுடன், 2 இலட்சம் மீன் குடம்பிகளை மீன் விரலிகளாக மாற்றி குளத்தில் விடும் வேலைத்திட்டமும் இதன்போது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், மேலதிக அரசாங்க அதிபர் நா. கமலதாசன், செட்டிக்குளம் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி தவமலர் மனோகரராஜா, மீனவர்கள், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

# வடக்கில் காணி விடுவிப்பதை அரசியல்மயப்படுத்த முடியாது

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க



யாழ்ப்பாணம், செப். 21

வடக்கில் யுத்த காலத்தில் பாதுகாப்பு நோக்கங்களுக்காகவே அரசாங்கத்தால் மக்களின் காணிகள் கையகப்படுத்தப்பட்டன. இந்த விவகாரத்தை அரசியல் அனுகூலங்களைப் பெறும் நோக்கில் பயன்படுத்த இடமளிக்கப்படமாட்டாது. வடக்கில் பெரும்பான்மையான மக்கள் ஏனைய கட்சிகளை விட தேசிய மக்கள் சக்திக்கே வாக்களித்திருக்கின்றனர். எனவே, அவர்கள் தொடர்பில் ஏனைய கட்சிகளை விட எமக்கு பொறுப்புகள் அதிகம் என அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

காணி விடுவிப்பு தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் கேள்வியெழுப்பிய போது அமைச்சருக்கும் சிறீதரனுக்கும் இடையே வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. சிறீதரன் எம். பி. உரத்த குரலில் கேள்வியெழுப்பிய போது, பதிலளித்த அமைச்சர் பிமல், "எனக்கு உங்களை விட உரத்த குரலில் பேச முடியும். உங்களுக்குத் தேவையான பிரசாரம் கிடைத்து விட்டதென நினைக்கின்றேன். எனவே தற்போது நான் கூறுவதைக் கேளுங்கள்," என்றார்.

காணிகளை விடுவிப்பதற்கு வைபவங்களை ஏற்பாடு செய்ய வேண்டிய தேவை கிடையாது. நாம் அவ்வாறு செய்யாத நிலையில், சிலர் சென்று எம்மால் தான் காணி விடுவிக்கப்பட்டது எனக் கூறிக் கொண்டிருக்கின்றனர். வடக்கிலுள்ள மக்கள் தேசிய மக்கள் சக்தி அதிகளவில் வாக்களித்திருக்கின்றனர்.

எனவே, உங்களை விட எங்களுக்கு அதிக பொறுப்புகள் உள்ளன. நாம் மக்களுக்காக சேவையாற்றுவோம். ஏனைய ஆட்சிக் காலங்களை விட வடக்கிற்கு அதிக அபிவிருத்திகளை முன்மொழிந்திருக்கின்றோம் - என்றார்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கூட்டத்தின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# ஆரம்பப்பிரிவு மாணவிகளுக்கான திறன்வகுப்பறை திறப்பு விழா

யாழ்ப்பாணம், செப். 21

குப்பிழான் ஐ. சண்முகன் நினைவாக அவரின் துணைவியார் புனிதவதியின் நிதி அனுசரணையுடன் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி ஆரம்பப்பிரிவு மாணவிகளுக்காக புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறை திறப்பு விழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது.

ஈழத்தமிழ் இலக்கிய உலகின் காத்திரமான எழுத்தாளரான குப்பிழான் ஐ. சண்முகன் (ஐயாத்துரை சண்முகலிங்கம்) ஞாபகார்த்தமாக இந்த வகுப்பறை அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த திறன் வகுப்பறையையும் கல்வெட்டினையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் இராஜ்யலட்சுமி சுப்பிரமணிய குருக்களும் புனிதவதி சண்முகலிங்கமும் இணைந்து திறந்து வைத்தனர்.



முன்னதாக பாடசாலையின் நுழைவாயிலில் இருந்து விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு அழைத்துவரப்பட்டு திறன்வகுப்பறை கட்டடம் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து ராஜேந்திர சிங்கம் மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெற்றன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்சார சபையில் 23,000 பேரின் தொழில் பாதுகாப்பற்ற நிலையில்

## முன்னாள் தொழிற்சங்கத் தலைவர்களை கடுமையாக சாடினார் சஜித் பிரேமதாஸ



அநுராதபுரம், செப். 21

அரச சேவையை வலுப்படுத்துவோம், அரச ஊழியர்களைப் பாதுகாப்போம் என்று வழங்கிய வாக்குறுதிகளை நம்பி, பெரும்பாலான அரச ஊழியர்கள் தற்போதைய திசை காட்டி அரசாங்கத்துக்கு வாக்களித்த போதிலும், இன்று மின்சார சபையில் 23,000 பேரின் தொழில் பாதுகாப்பற்ற நிலையில் காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அரசாங்கம் இவர்களின் தொழில்கள் குறித்து பொறுப்பேற்காது என்றும் அவர்கள் தானாக முன்வந்து ஓய்வு பெறலாம் என்றும் அதிகாரிகள் கூறி வருகின்றனர். மின்சார சபை ஊழியர்களை வீதியில் இறக்கி காலாகாலமாக ஆர்ப்பாட்டத்தை நடத்திய தற்போதைய அமைச்சர்களாக இருந்து வரும் முன்னைய தொழிற்சங்க தலைவர்களால் அவர்களின் தொழிலகளுக்கு பொறுப்புக் கூற முடியாதாம் என்றும் சஜித் பிரேமதாஸ சாடினார்.

'கிராமத்துக்கு கிராமம், வீட்டுக்கு வீடாக' எதிர்க்கட்சித் தலைவர் நடமாடும் சேவை வேலைத்திட்டத்தின் கீழ் மிஹிந்தலை தேர்தல் தொகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சஜித் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"அதிகாரத்தில் இல்லாத போது, இந்த தொழிற்சங்கத் தலைவர்கள் மின்சார சபை ஊழியர்கள் 23,000 பேரினதும் தொழில்களைப் பாதுகாக்க உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருந்தனர். ஆனால், இன்று, அதிகாரத்தோடு அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது, மின்சார சபை ஊழியர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை விடுத்து ஆட்சியைப் பாதுகாக்கும் நோக்கில் செயல்பட்டு வருகின்றனர். அப்போது பெருமையாகப் பேசிக் கொண்ட தொழிற்சங்கத் தலைவர்கள், ஆட்சிக்கு வந்த பிறகு, இதையெல்லாம் மறந்துவிட்டு, அரசாங்கத்தைப் பாதுகாக்க கடும் பிரயத்தனம் எடுத்து வருகின்றனர். இன்று ஆட்சியைப் பிடித்த பிறகு அரசாங்கம் பொதுமக்களை அச்சுறுத்தி வருகிறது.

அரசாங்கம் விவசாயிகள், தொழில்முனைவோர், அரச ஊழியர்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினர் உட்பட அனைவரையும் மறந்துவிட்டு செயல்பட்டு வருகிறது. போதாக்குறைக்கு அச்சுறுத்தி வருகிறது. அரசாங்கத்தைப் பாதுகாக்க அவர்கள் கொலை செய்யவும், உயிர்த் தியாகம் செய்யவும் தயாராக இருப்பதாகவும் பிரஸ்தாபித்து வருகின்றனர். ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதல்களை எதிர்கொண்டு சும்மா இருப்பதா அல்லது விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் அரச ஊழியர்களைப் பாதுகாக்க வீதிகளில் இறங்குவதா? என்பதை மக்களே சிந்திக்க வேண்டும். இத்தகைய ஜனநாயகப் போராட்டத்துக்கு தலைமை தாங்க நான் தயார்.

விவசாய உபகரணங்களின் விலைகளும் அதிகரித்து காணப்படுகின்றன. உப கரணங்களை வாடகைக்கு எடுப்பதற்கு கூடிய பணம் செல வாகும் நேரத்தில், காட்டு யானைகள் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கின்றன. இந்தப் பயிர் இழப்புகளுக்கு காப்பீட்டு - இழப்பீட்டு முறைகளும் இல்லாமையால், விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் மிகவும் கடினமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர். இந்த மக்களுக்காக முடிந்த வரை போராடி அவர்களின் உரிமைகளைப் பெற்றுத் தர முடிந்த வரை நடவடிக்கை எடுப்பேன்"- என்றார். (எ)

# மின்சார சபை ஊழியர்களின் நிதியை மீள வழங்கவேண்டும்

## முன்னாள் அமைச்சர் சம்பிக்க

கொழும்பு, செப். 21

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உட்பட அரசாங்கம் மின்சார சபையின் சேவையாளர்களை அச்சுறுத்துவதற்கு முன்னர் மக்களிடம் மன்னிப்புக் கோரி சுமார் 25 ஆண்டுகாலமாக தமது மின்சார தொழிற்சங்கத்தினரிடம் சேகரித்த நிதியை அவர்களுக்கு மீண்டும் வழங்க வேண்டும். மின்சார சபையின் நட்டத்தை மின்பாவனையாளர்கள் மீது சுமத்தும் வகையில் மீண்டும் மின்கட்டணத்தை 7 சதவீதத்தால் அதிகரிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளது என முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

"இலங்கை மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனையை 2002 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொண்டு வந்தார். மின்சார சபையை மறுசீரமைக்கும் யோசனைக்கு மக்கள் விடுதலை முன்னணி தான் ஆரம்பத்தில் இருந்து கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியது.

மின்சார சபையை பாதுகாக்க வேண்டும் என்று குறிப்பிட்டுக்கொண்டு மக்கள் விடுதலை முன்னணி மின்சார சபை தொழிற்சங்க உறுப்பினர்களிடமிருந்து ஒவ்வொரு மாதமும் தலா 200 ரூபாயை பெற்றுக் கொண்டு அதனை தமது கட்சியின் வங்கிக் கணக்கில் வைப்பிட்டது.

2015 ஆம் ஆண்டு அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு கடும் அழுத்தம் பிரயோகித்து மக்கள் விடுதலை முன்னணி தமது 6000 ஆதரவாளர்களை இலங்கை மின்சார சபையில் இணைத்துக் கொண்டது. மக்கள் விடுதலை முன்னணி ஒவ்வொரு மாதமும் தம்மிடமிருந்து 5000 ரூபாய் அறவிட்டதாக அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே, மின்சார தொழிற்சங்கத்தினரிடம் சேகரித்த நிதியை அவர்களிடம் மீண்டும் வழங்க வேண்டும்"- என்றார். (எ)

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு குறித்து புதிய சட்டம் கொண்டுவரவும் தயார்!

கொழும்பு, செப். 21

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு அல்லது தேவை என்றால் புதிய சட்டம் ஒன்றை கொண்டுவந்தாவது வெளிநாட்டு தொழில் துறையின் ஒழுங்குபடுத்தலுக்கு தேவையான நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வோம் என பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

வெளிநாட்டு தொழில்வாய்ப்பு தொடர்பாக கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை தேடிப்பார்த்தல் மற்றும் அவற்றுக்கு விரைவாக் தீர்வுகளை பெற்றுக்கொடுப்பதற்காக பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட விசேட விசாரணை பிரிவொன்றை திறந்து வைக்கும் நிகழ்வு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (எ)

# மின்சார சபை ஊழியர்கள் வேலைநிறுத்த போராட்டம்

## இன்று நள்ளிரவு வரை நீடிக்கும்

கொழும்பு, செப். 21

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்புக்கு எதிராக மின்சார சபை ஊழியர்கள் ஆரம்பித்த வேலைநிறுத்தப் போராட்டத்தை இன்று நள்ளிரவு வரை தொடர மின்சார தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளன.

இதேநேரம், மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்டத்தை எதிர்த்து தொழிற்சங்கங்கள் எதிர்வரும் 4 ஆம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

மின்சார சபை ஊழியர்கள் குழுக்களாக இணைந்து மின்சார சபை தலைமையகத்தின் முன் இரண்டு நாட்கள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புதிய மின்சார சபைச் சட்டத்தின் பாதகமான விளைவுகளை எதிர்த்து தொடர்ந்தும் போராடுவோம் என தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் சர்வதேச தொழிலாளர் அமைப்புக்கு அறிக்கை வழங்குவதாவும் அவர்கள் தெரிவித்தனர்.

இதற்கிடையில் மின்சார சபை ஊழியர்களின் சலுகைகளைக் குறைக்க தற்போதைய அரசாங்கம் எந்த முடிவும் எடுக்கவில்லை என வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார். (எ)

# முன்னாள் எம்.பி. கனகசபை காலமானார்

மட்டக்களப்பு, செப். 21

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தன்மன்பிள்ளை கனகசபை (வயது -86) நேற்று முன்தினம் வயது மூப்பு காரணமாக காலமானார்.

மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த இவர், ஓய்வுநிலை அரச உத்தியோகத்தராவார்.

இவர், 2004ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டு, அதிகூடிய விருப்பு வாக்குகளைப் பெற்று பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவானமை குறிப்பிடத்தக்கது. (எ)

# "தமிழ் மக்களின் பிரச்னைக்கு விரைவில் தீர்வு கிடைக்கும்"

மட்டக்களப்பு, செப். 21

தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு உள்நாட்டு பொறிமுறைகள் மூலம் விரைவில் தீர்வு காணப்படும் எனவும் தமிழ் அரசியல்வாதிகள் மக்களைத் திசைதிருப்பி, குழப்பமடையச் செய்யும் வங்குரோத்து அரசியலை முன்னெடுப்பதாகவும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகளின் வங்குரோத்து அரசியல் இல்லாமல் செய்யப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு, புதூர் பகுதியில் வீதி அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்ட போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தேசிய மக்கள் சக்தி இந்த நாட்டைப் பொறுப்பேற்ற பின்னர், நேர்த்தியாகவும் நீதியான முறையில் சட்ட ஆட்சியை நடைமுறைப்படுத்தி வருகிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பயன்படுத்தி, வீதி அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறோம். இதற்கு முன்னர் மீளாய்வு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறோம்.

எதிர்க்கட்சியினர், குறிப்பாக வடக்கு - கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் அரசியல்வாதிகள், எங்களுக்கு எதிராகத் தொடர்ச்சியாக அவதூறு பரப்பி வருகின்றனர்.

ஆனால், நாங்கள் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வருகிறோம். உள்நாட்டுப் பொறிமுறைகள் மூலம் இந்தப் பிரச்னைகளைத் தீர்க்க முயற்சிக்கிறோம். தேவையான சர்வதேச ஆலோசனைகளைப் பெற்று, நேர்த்தியான முறையில் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறோம்"- என்றார். (எ)

# "அநுரவை நம்பிய மக்கள் ஏமாற்றம்"

கொழும்பு, செப். 21

2020இல் கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஏமாற்றமடைந்த மக்கள் தற்போது அநுரகுமார திஸநாயக்கவிடம் ஏமாற்றமடைந்துள்ளனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சியின் மாநாட்டுக்கு விடுக்கப்பட்ட அழைப்புக்கு மதிப்பளித்து ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அதில் பங்கேற்பார். இனிவரும் காலங்களில் இவ்விரு கட்சிகளும் இணைந்து செயல்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் தான் உறுதியாகவுள்ளதாகவும் அவர் கூறினார்.

சமகால அரசியல் நிலைவரம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

நான் அரசியலுக்கு வர முன்னர் கோடிகளில் காணப்பட்ட வருமானம், அரசியலுக்குள் பிரவேசித்த பின்னர் வங்கிக் கடனில் செல்கிறது. ஆனால், ஆளுந்தரப்பினருக்கு உண்ண உணவும் உடுத்த உடையும் இன்றி இருந்த காலம் மாறி தற்போது அவர்கள் தனவந்தர்களாகவுள்ளனர். இது இன்று சமூகத்தில் பாரிய கேள்வியாகவுள்ளது. நாமும் எமது சொத்து பிரகடனத்தை வழங்கியிருக்கின்றோம்.

சொத்து பிரகடனம் வெளியிடப்பட்ட பின்னர் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சொத்து விவரங்களுக்கு அப்பால் ஜே.வி.பி. கடந்த காலங்களில் எந்தளவுக்கு பொய் கூறி மக்களை ஏமாற்றியிருக்கிறது என்பது தற்போது தெளிவாகியிருக்கிறது. 2020இல் கோட்டாபய ராஜபக்ஷவிடம் ஏமாற்றமடைந்த மக்கள் தற்போது அநுரகுமார திஸநாயக்கவிடம் ஏமாற்றமடைந்துள்ளனர். ஆனாலும், மக்கள் யதார்த்தத்தை புரிந்து கொள்ள மாட்டார்கள்.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# யாழ். செயலகத்தில் இரத்ததான முகாம்





யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலக நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் இரத்ததான முகாம் நலன்புரிச் சங்க தலைவரும் புள்ளி விவரப் பிரிவின் பிரதிப் பணிப்பாளருமான ம. வித்தியானந்தநேசன் தலைமையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் பங்குபற்றுதலுடனும் நேற்றுமுன்தினம் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இவ் இரத்ததான ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன், யாழ். போதனா மருத்துவமனையின் இரத்த வங்கிப் பிரிவின் வைத்திய அதிகாரி எஸ். சண்முகப்பிரியா, பொதுச் சுகாதார பரிசோதகர் த.ரவீனதாஸ், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர்.

மேலும், இரத்ததான நிகழ்வில் 31 மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் குருதிக் கொடை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(எ)

# மித்தெனியாவில் இரசாயனங்கள் மீட்பு: ஆய்வறிக்கை பொலிஸிடம் ஒப்படைப்பு

கொழும்பு, செப். 21

**மாத்தறை, மித்தெனியாவில் மீட்கப்பட்ட இரசாயனங்கள் குறித்த அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஆய்வறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.**

இந்த அறிக்கையின்படி, அவை ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

செப்ரெம்பர் 6 ஆம் திகதி, கெஹெல்பத்தர பத்மே மற்றும் குடு நிலங்க உள்ளிட்டவர்கள் நாட்டில் ஐஸ் போதைப் பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சுமார் 50 ஆயிரம் கிலோ கிராம் இரசாயனங்களை மித்தெனிய பகுதியிலிருந்து மேற்கு வடக்கு குற்றப்பிரிவு மீட்டது.

இந்தோனேஷியாவில் கைது செய்யப்பட்ட பெகோ சமனிடம் மேற்கு வடக்கு குற்றப் பிரிவு நடத்திய விசாரணையில் கிடைத்த தகவல்களின் அடிப்படையில் இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பின்னர், குறித்த இரசாயன மாதிரிகள் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டன.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் அறிக்கையில், 20 மாதிரிகளில் 17 மாதிரிகளில் ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் அரச பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் ஆய்வறிக்கை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த அறிக்கையும் மித்தெனிய பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இரசாயனங்கள் ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுபவை என உறுதிப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

கேகாலையில் பயங்கரம்!

# மகனை கொலை செய்த தந்தை; மனைவி காயம்

கேகாலை, செப். 21

கேகாலை, தேவாலேகம பொலிஸ் பிரிவின் பட்டுவத்த பகுதியில் நேற்று முன்தினம் இரவு, குடும்பத் தகராறு காரணமாக ஒருவர் தனது மனைவி மற்றும் மகனைத் தாக்கியதில் 35 வயது மகன் உயிரிழந்தார்.

தாக்குதலில் காயமடைந்த மனைவி கேகாலை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேவாலேகம பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலையடுத்து, இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் பட்டுவத்த, ஹெலமட பகுதியைச் சேர்ந்தவராவார்.

பொல்லு ஒன்றால் தாக்கப்பட்டதால் இந்தக் கொலை இடம்பெற்றதாக ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(எ)

# மட்டக்களப்பில் ரயிலில் போதைப்பொருள் மீட்பு

மட்டக்களப்பு, செப். 21

கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த ரயில் நேற்று முன்தினம் மாலை 04:10 மணியளவில் மட்டக்களப்பு ரயில் நிலையத்தை சென்றடைந்த போது, கைவிடப்பட்ட பை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது.

ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் குறித்த பையை பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

அந்தப் பையைத் திறந்து பரிசோதித்தபோது, அதில் 252 பைக்கெற்றுகளில் பொதி செய்யப்பட்ட 200 கிராம் 'ஐஸ்' வகை போதைப் பொருள் இருப்பது கண்டறியப்பட்டது.

இதனையடுத்து, மட்டக்களப்பு தலைமையக பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இந்தப் போதைப்பொருளை நீதிமன்றத்தில் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகினறனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மட்டக்களப்பு தலைமையக பெரும் குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# இணையவழி பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 21

2025 ஆம் ஆண்டு இதுவரை, இணையவழி ஏமாற்றுதல் மூலம் 28 சிறுவர்களும் 118 பெண்களும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ளதாக பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேவேளை 2024 ஆம் ஆண்டில் 18 வயதுக்குட்பட்ட 15 சிறுவர்கள் இணையவழி மூலம் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு ஆளானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எவ்.யு. வுட்லர் தெரிவித்தார்.

இதே ஆண்டில், 375 பெண்கள் இத்தகைய துஷ்பிரயோகத்துக்கு ஆளாகியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இதுபோன்ற சம்பவங்களில் ஈடுபட்ட 114 நபர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (எ)

# எனது தந்தையின் ஆசையை நிச்சயம் நிறைவேற்றுவேன்!

## துனித் வெல்லாலகே தெரிவிப்பு



கொழும்பு, செப். 21

எனது தந்தையின் ஒரே ஆசை, நான் ஒரு சிறந்த கிரிக்கெட் வீரராகி இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்பதுதான். அந்த ஆசையை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்று இளம் கிரிக்கெட் வீரர் துனித் வெல்லாலகே தெரிவித்தார்.

தனது தந்தையின் திடீர் மறைவு காரணமாக ஆசியக் கிண்ணத் தொடருக்கு இடையில் நாடு திரும்பிய துனித் வெல்லாலகே, நேற்றுக் காலை இலங்கை அணியுடன் மீண்டும் இணைவதற்காக நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முன்பு இவ்வாறு கூறினார்.

"எனது சிறு வயதிலிருந்தே என் தந்தையிடமிருந்து மிகுந்த ஆதரவு கிடைத்தது. நான் ஒரு சிறந்த வீரராகி நாட்டுக்காக விளையாட வேண்டும் என்பதே அவரது ஒரே ஆசை. அந்த ஆசையை நான் நிச்சயமாக நிறைவேற்றுவேன். ஆசியக் கிண்ணத்தில் எங்களுக்கு இன்னும் போட்டிகள் உள்ளன. எனது அணிக்கு நூறு சதவீத பங்களிப்பை வழங்குவேன் என்று நம்புகிறேன். சனத் ஜெயசூரியா, அணித்தலைவர் சரித் அசலங்க உள்ளிட்ட அணி மற்றும் இலங்கையில் உள்ள அனைவரிடமிருந்தும் எனக்கு மிகுந்த ஆதரவு கிடைத்துள்ளது. அது எனக்கு ஒரு பெரிய பலம். எனவே, இத்தகைய சவாலான சூழ்நிலையில் எனக்கு வழங்கப்பட்ட ஆதரவுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருக்கிறேன்"- என்றார்.

(எ)

# சட்டத்தரணி வீட்டிலிருந்து பல துப்பாக்கிகள் மீட்பு

இரத்தினபுரி, செப். 21

இரத்தினபுரி, கொலுவாவில வத்தையில் உள்ள வீடு ஒன்றில் தனியாக வசித்து வந்தபோது திடீரென மாரடைப்பால் இறந்ததாக சந்தேகிக்கப்படும் 73 வயது சட்டத்தரணி ஒருவரின் வீட்டிலிருந்து இலங்கையிலும் வெளிநாட்டிலும் தயாரிக்கப்பட்டதாக சந்தேகிக்கப்படும் பல துப்பாக்கிகளை இரத்தினபுரி பொலிஸார் மீட்டுள்ளனர்.

இரத்தினபுரி பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ரோந்துப் பணியில் இருந்த அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, சட்டத்தரணி உயிரிழந்த வீட்டை சோதனை செய்தபோது பல துப்பாக்கிப் பாகங்கள் மற்றும் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

அதில், போர 12 ரக துப்பாக்கி ஒன்று, ரிப்பீட்டர் வகை துப்பாக்கி ஒன்று, போர 12 ரக துப்பாக்கிகளின் 6 அசல் பாகங்கள், 11 பீப்பாய்கள், 2 சிறிய துப்பாக்கிகள், போர 12 மற்றும் 16 ரக துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் 440 புதிய தோட்டாக்கள் உட்பட பல துப்பாக்கிகள் மற்றும் அவற்றின் பாகங்கள் அடங்கியுள்ளதாக இரத்தினபுரி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிகள் சில குற்றச் செயல்களுக்காக வழங்கப்பட்டதா? என்பதையும், இவற்றுடன் மேலதிக துப்பாக்கிகள் சில குழுக்களுக்கு வழங்கப்பட்டதா? என்பதையும் கண்டறிய விசாரணைகள் நடைபெறுவதாக இரத்தினபுரி தலைமையக பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன சுமனசிறி கூறினார். (எ)

# நாட்டின் பல பகுதிகளில் கடும் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, செப். 21

மேல், சப்ரகமுவ, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது கடும் மழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி, மாத்தறை, கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் சில இடங்களில் 50 மில்லி மீற்றருக்கு மேல் பலத்த மழை எதிர்பார்க்கப்படுகிறது.

ஊவா மாகாணத்திலும் அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் பிற்பகல் 01:00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடமத்திய, வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணிக்கு 30 - 40 கிலோ மீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் போது, தற்காலிகமாக வீசக்கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களால் ஏற்படும் பாதிப்புகளை குறைக்க, பொதுமக்கள் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றனர் என வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
21.09.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், புரட்டாதி 05

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

தொலைபேசி : 021 205 2300

# மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுமா?

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முக்கியஸ்தர்கள் அவ்வப்போது மாகாண சபைத் தேர்தல் அடுத்த ஆண்டு இடம்பெறும் என்று கூறிவருகின்றனர். அண்மையில் ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவும் அடுத்த ஆண்டு தேர்தல் இடம்பெறும் என்று கூறியிருந்தார். ரில்வின் சில்வா தற்போதைய சூழலில் மிகவும் சக்திவாய்ந்த செயலாளராக நோக்கப்படும் ஒருவர்.

இவ்வாறு கூறப்படுகின்ற போதிலும் தேர்தல் உண்மையிலேயே இடம்பெறுமா என்னும் சந்தேகமும் நிலவுகின்றது. இதற்கிடையில் எல்லை நிர்ணயம் தொடர்பான பிரச்னைக்கும் தீர்வு காணவேண்டியுள்ளது. ஒரு வேளை எல்லை நிர்ணயத்தை முடித்த பின்னர்தான் தேர்தல் என்றால் அதற்கு காலம் தேவை. அவ்வாறானதொரு பின்புலத்தில் அடுத்த ஆண்டு தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பில்லை. பழைய முறையிலேயே தேர்தலை நடத்துவதென்று முடிவெடுத்தால் தேர்தலை நடத்துவதில் தடையிருக்காது.


தேசிய மக்கள் சக்தியை பொறுத்தவரையில் உள்ளூராட்சித் தேர்தலில் அவர்கள் எதிர்பார்த்தது போன்று வெற்றி கிட்டவில்லை. இந்த நிலையில் தேர்தலை நடத்துவது என்றால் அடுத்த ஆண்டு நடத்தவேண்டும் - அடுத்த ஆண்டு தவறினால் அதன் பின்னர் தேர்தலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எதிர்கொள்ள விரும்பாது. மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு பெரும் அழுத்தங்கள் எதும் இல்லை.

எதிர்க்கட்சிகள் ஆங்காங்கே கூறுகின்றனவே தவிர தேர்தல் நடத்தப்படாமையை ஒரு ஜனநாயக விரோத செயலாக முன்னிறுத்தி ஒன்றுபட்டு செயல்பட அவர்கள் தயராக இல்லை. முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் பார்ப்போம் என்றவாறு மாகாண சபைத் தேர்தலை முன்னிறுத்தி அரசாங்கத்திற்கு சவால் விடும் வேலையையே செய்கின்றனர். இதனால் அரசாங்கமும் விடயத்தை தேர்தல் அரசியலாக நோக்குகின்றதே தவிர மாகாண சபைத் தேர்தல் விவகாரத்தை ஒரு ஜனநாயக விவகாரமாக நோக்கவில்லை.

இந்த நிலையில், இந்த விடயத்தை ஒரு ஜனநாயக விரோத விவகாரமாக முன்னிறுத்திச் செயல்படவேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்கே உண்டு. ஏனெனில் மாகாண சபையை விட்டால் வடக்கு, கிழக்கை ஓர் அலகாகக் கொண்டு அரசியலை முன்னெடுப்பதற்கு தமிழ் மக்களை பொறுத்தவரையில் வேறு எந்த வழியும் இல்லை. மாகாண சபை முழுமையான தீர்வா அல்லது இல்லையா என்னும் விவாதங்களுக்கு அப்பால், மாகாண சபை ஒன்றுதான் ஓர் அரசியல் அதிகார அலகுக்கான அந்தஸ்தை தமிழர்களுக்கு வழங்குகின்றது. எனவே இதனைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டிய பொறுப்பு தமிழ் கட்சிகளுக்குண்டு. ஆனால், அதனை உணர்ந்து செயல்படும் நிலையில் கட்சிகள் இருக்கின்றனவா என்றால் இல்லை. பட்டு வேட்டிக் கனவில் இருக்கும் கோவணத்தையும் இழந்து போகும் நிலையிலேயே தமிழ் கட்சிகள் இருக்கின்றன.

தமிழ்க் கட்சிகள் இந்த விடயத்தை ஒரு தேர்தல் விடயமாக நோக்குவதை விடுத்து, இலங்கையின் ஜனநாயகத்தின் வீழ்ச்சியாக சுட்டிக்காட்டும் வகையில் விடயத்தை உருமாற்ற வேண்டும். அப்போதுதான் அரசாங்கமும் அதன் தேர்தல் கணக்கிலிருந்து இறங்கி வரும். இல்லாவிட்டால், தேர்தல் கணக்கின் அடிப்படையில் நோக்கினால், அடுத்த ஆண்டு தவறினால், மாகாண சபைத் தேர்தல் இடம்பெறுவதற்கான வாய்ப்பு இருக்காது. ஏனெனில் அதன் பின்னர் தேர்தலை நடத்துவது அரசாங்கத்தை பொறுத்தவரையில் விஷப்பரீட்சை.

# பேராசிரியர் துரைராஜாவுக்கு சிலை அமைக்கும் இடம் பொருத்தமானதா?



யாழ்ப்பாணம் நல்லூர் பிரதேச சபை பேராசிரியர். துரைராஜாவுக்கு சிலை யமைக்கும் அருமையான முயற்சியை முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

துறை சார் புலமையாளர் மனிதநேயமிக்க மாமனிதர் தமிழ்த் தேசியப் பற்றாளர் படோபகாரம் அற்ற எளிமையான வாழ்வியலைக் கொண்டு வாழ்ந்தவர். "வையத்துள் வாழ் வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர்.

அத்தகைய பெருமகனாருக்கு சிலை அமைக்கப்பட வேண்டும் என்ற சிந்தனை நல்லூர் பிரதேச சபை தவிசாளருக்கும் அவரைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் ஏற்பட்டிருப்பது உண்மையில் பாராட்டுக்குரியது, என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடம் இருக்காது. குறிப்பாக கூறுவதாயின் நல்லூர் பிரதேச சபையின் இந்த முயற்சியினை யாழ் பல்கலைக்கழக சமூகம் பெரும் ஆதரவுக் கரம் நீட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

ஏனெனில் பேராசிரியர். துரைராசா அவர்களின் சேவையினால் பெரிதும் பயன் பெற்றவர்கள் பல்கலைக்கழக சமூகத்தினரே!. அவர் துணைவேந்தராகப் பதவி வகித்த காலத்தில் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், அங்கு கடமையாற்றியிருந்த ஊழியர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் அவரால் பெரும் நன்மைகளை பெற்றிருந்தனர்.

எனவே பேராசிரியருக்கு சில வைப்பது தொடர்பில் பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடி முடிவெடுப்பது சிறந்தது.

இதற்கு அப்பால் பேராசிரியர் தமிழ்த் தேசியப் பற்றாளராக விடுதலைப் போராட்டத்திற்கும் உரம் ஊட்டியவர். போராட்ட காலத்தில் பல்கலைக்கழக நிர்வாகத்தினை திறம்பட நடத்தியவர். பல்கலைக்கழக மாணவர்கள் சார்ந்த பிரச்சனைகளை லாவகமாக கையாண்டு தீர்த்து வைத்தவர். மிக முக்கியமாக இராணுவ, பொலீஸ் கெடுபிடிகளிலிருந்து போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை மாணவர்களுக்காக முன்னெடுத்திருந்தவர்.

அத்தகைய பெருமகனாருக்கு, சான்றோ னுக்கு சிலைஅமைக்க நல்லூர் பிரதே சபையினர் முன்மொழிந்திருக்கும் திருநெல்வேலி சந்தி, கொக்குவில் திருநெல்வேலி வீதி ஆகிய இடங்கள் இரண்டும் பொருத்தமுடையனவா?.

ஒரு தேசத்தின், இனத்தின், தேசிய தலைவ ருக்கு பொது வெளியில் சிலை அமைப்பதை யாரும் ஆட்சேபிக்க இடமிருக்காது. அத்தகைய தலைவர் பொதுமக்களுக்காக வாழ்ந்தவர். பொதுமக்கள் பிரதிநிதியாக வாழ்ந்தவர். அவர்களுக்காக சேவை ஆற்றியவர்.

ஆனால் பேராசிரியர் துரைராசா தனது துறை சார்ந்து, தனது அறிவாற்றல் சார்ந்து சிறப்பாகப் பல்கலைக்கழக சமூகத்திற்கு பணியாற்றியவர். அவர்களால் அடிக்கடி நினைவு கூரப்பட வேண்டியவர். அத்தகைய பெருமகனாருக்கு யாழ் பல்கலைக்கழக வளாகத்திலேயே! சிலை அமைப்பது மிக மிகப் பொருத்தமானது என்பது தாழ்மையான கருத்தாகும். இக்கருத்து தொடர்பில் நல்லூர் பிரதேச சபை தவிசாளர் கவனம் எடுத்து, பல்கலைக்கழக சமூகத்தினருடன் கலந்துரையாடி முடிவுக்கு வருவது பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

பொது வெளியில் சிலை அமைப்பதாயின் யாழ்ப்பாண தமிழ் இராட்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலியனின் சிலையை அமைப்பது சாலச் சிறந்தது என்ற கருத்தையும் தவிசாளர் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன்.

ஏனெனில் இன்றைய கால சூழலில் சங்கிலி மன்னனின் தொல்லியல் சான்றுகள் அழிந்து போகும் நிலையில் காணப்படுகிறது. குறிப்பாக சங்கிலி மன்னனின் மந்திரிமனை இடிந்து விழுந்திருப்பது கவனிக்கத்தக்கது. புனரமைப்புப் பணிக்கு தனிநபர் இடையூறாக இருப்பது யாவரும் அறிந்ததே.

**என்.பி. சிறிந்திரன்**
(சங்கிலி மன்னன் நினைவு தினக் குழுச் செயலாளர்)


# பிரஜா சக்தி வறுமை ஒழிப்பு தேசிய வேலைத்திட்டம் யாழில்

யாழ்ப்பாணம், செப். 21


நாடு முழுவதிலும் வறுமையை ஒழித்து சமூகங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட 'பிரஜா சக்தி' வேலைத்திட்டம், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் கடந்த ஜூலை மாதம் 04ஆம் திகதி அலரி மாளிகையில் நடைபெற்ற நிகழ்வில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த நிலையில் ஜனாதிபதி செயலகத்தால் பிரஜா சக்தி வறுமை ஒழிப்புக்கான தேசிய வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்ட மட்டத்தில் திணைக்கள தலைவர்களுக்கு விளக்கமளிக்கும் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பெண் கல்வி: நாட்டின் முதலீடு!

ஆர்.சங்கீதா

ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை கல்வி. ஆனால், வரலாற்றில் பல நூற்றாண்டுகளாக, பெண்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட ஒரு சமுதாயத்தில் நாம் வாழ்ந்தோம். ஆண்களுக்கு மட்டுமே கல்வி அளிப்பது, பெண்களை வீட்டுக்குள் அடைத்து வைப்பது போன்ற கட்டுப்பாடுகள் நிலவின. ஆனால், நவீன உலகில் இந்த எண்ணங்கள் மாறி வருகின்றன. பெண்கள் கல்வி பெறுவது என்பது தனிப்பட்ட வளர்ச்சிக்கு மட்டுமல்லாமல், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இன்றியமையாதது என்பதை உலகம் உணர்ந்துள்ளது.

இந்தியா , இலங்கை போன்ற நாடுகளில், கடந்த சில ஆண்டுகளாகப் பெண்களின் கல்வி விகிதம் அதிகரித்திருந்தாலும், இன்னும் சில சவால்கள் உள்ளன. கிராமப்புறங்களில், பெண் குழந்தைகள் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்துவது, குழந்தை திருமணம் மற்றும் வீட்டு வேலைகளில் ஈடுத்துவது போன்ற காரணங்கள் இன்னும் நீடிக்கின்றன.

ஒரு பெண் கல்வி கற்றால், முதலில் பயன்பெறுவது அவரது குடும்பம்தான். படித்த தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளைச் சரியாகப் பள்ளிக்கு அனுப்புகிறார்கள் அவர்களுக்கு வீட்டுப் பாடங்களில் உதவுகிறார்கள். மேலும், அவர்களின் கல்வி வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகிறார்கள். கல்வி பெற்ற தாய்மார்கள் தங்கள் குழந்தைகளின் உடல்நலம், ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரம் குறித்து நன்கு அறிந்திருப்பதால், குழந்தைகளின் இறப்பு விகிதமும் குறைகிறது.

எழுத்தறிவு பெற்ற பெண்கள், தங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பற்றி நன்கு அறிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கும், குடும்பத்தினருக்கும் உடல் நலம் மற்றும் தடுப்பூசிகளின் அவசியம், சுத்தமான தண்ணீர், உணவைப் பயன்படுத்துதல் மற்றும் நோய்த் தடுப்பு முறைகள் குறித்து நன்கு அறிந்திருக்கிறார்கள். இது குடும்பத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், உடல் நலனையும் மேம்படுத்துகிறது.

ஒரு குடும்பத்தில், குறிப்பாக பொருளாதார முடிவுகள் எடுப்பதில், பெண்கள் முக்கியப் பங்கு வகிக்கிறார்கள். கல்வி கற்ற பெண்கள், நிதி மேலாண்மை, முதலீடு மற்றும் செலவினங்கள் குறித்துத் திறம்பட முடிவெடுக்க முடிகிறது. கல்வி என்பது பாலின சமத்துவத்துக்கு வழிவகுக்கிறது. கல்வி கற்ற பெண்கள் தங்களது உரிமைகளுக்காகப் போராடவும், சமூகத் தடைகளை எதிர்த்து நிற்கவும் தயங்குவதில்லை. இது பெண்களுக்கு எதிரான பாகுபாட்டைக் குறைத்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமான வாய்ப்புகளை உருவாக்குகிறது.

ஒரு நாட்டில் பெண்கள் வேலை செய்தால், அது நாட்டின் பொருளாதார உற்பத்தித் திறனை அதிகரிக்கிறது. படித்த பெண்கள் மருத்துவர்கள், நீதிபதிகள், ஆசிரியர்கள், பொறியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள் போன்ற பணிகளில் திறம்பட செயலாற்றுகிறார்கள். இது நாட்டின் மனிதவளத்தை முழுமையாகப் பயன்படுத்த உதவுகிறது. ஐக்கிய நாடுகளின் வளர்ச்சித் திட்டம் நடத்திய ஆய்வின்படி, பெண்க ளின் கல்வியில் முதலீடு செய்வது, வறு மையைக் குறைத்து, ஒரு நாட்டின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியை மேம் படுத்துகிறது.

படித்த பெண்கள் அரசியல் விழிப்புணர்வுடன் இருக்கிறார்கள். அவர்கள் வாக்களிப்பது, தேர்தலில் போட்டியிடுவது மற்றும் அரசியல் முடிவுகளை எடுப்பது போன்ற செயல்பாடுகளில் அதிக அளவில் பங்கேற்கிறார்கள். இது ஒரு ஜனநாயக நாட்டின் வலிமையை அதிகரிக்கிறது.

ஒரு பெண் கல்வி பெற்றால், ஒரு தலைமுறையே கல்வி பெறும். இது வளமான, வலிமையான தேசத்தைக் கட்டமைக்க உதவும். எனவே, பெண்களுக்குக் கல்வி அளிப்பது என்பது ஒரு நாட்டின் எதிர்காலத்துக்கு நாம் செய்யும் மிகச் சிறந்த முதலீடாகும். ●

## இந்தவார ராசிபலன் 21.09.2025 - 27.09.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - புரட்டாதி 05
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அமாவாசை

**மேஷம்** [ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, கடின உழைப்பினால், வாழ்க்கையில் முன்னேற்றங்கள் அடைவீர்கள். சிலருக்கு, கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். அனைத்து இலக்குகளையும் எளிதில் அடைய உங்கள் தீர்மானங்களை மறுபரிசீலனைக்கு உள்ளாக்குங்கள், முக்கியமான விஷயங்களுக்கு முன்னுரிமை கொடுங்கள், கணக்குகளை சீராக்குங்கள் அப்போதுதான் அதில் வெற்றி அடைய முடியும். நன்மை ஏற்படும்.

**ரிஷபம்** [ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். மாணவர்கள் அனைவரும் தேர்ச்சி அடைவர். சிலருக்கு, அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய வீடு அமையும். நீண்ட நாட்களுக்குப் பிறகு, வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். அரசு பணி புரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். அவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளிலும் வெற்றிபெறும்.

**மிதுனம்** [ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் மனங்கவர்ந்த அன்புமிக்க பெண்களால் ஆனந்தம் பெருகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வு கிடைக்கும். நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், நீண்ட நாட்களுக்குப் பிறகு, பயிர், மனை இவற்றால் லாபம் ஏற்படும். பணப் பற்றாக்குறை ஏற்பட்டாலும், தொழிலில் அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். தொழிலில் இடமாற்றம் வரும்.

**கடகம்** [ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சிலருக்கு, கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகி யவை கிடைக்கும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை மூலம் செலவு கள் கூடும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், பதவி உயர்வுகள் தேடி வரும். சிலருக்குப் பணியில் இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம் என்பன ஏற்படும்.

**சிம்மம்** [ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகள் மூலம் வீடே விழாக்கோலம் காணும். திடீரென ஏற்படும் இனிய பயணங்களால் ஆதாயம் மற்றும், மகிழ்ச்சியும் ஏற்படும். பண வருமானம் அதிகரிக்கும். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும். அழகிய ஆடை ஆபரணங்கள் கிடைக்கும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் சம்பாதிக்கும் சிந்தனையுடன் இருப்பீர்கள்.

**கன்னி** [ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் இறைவனை நினைத்து இன்னல்களைக் குறைத் துக் கொள்வார்கள். மனதில் அமைதியும் நிலவும். சிலருக்குத் திரும ணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் அரசு பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். பணவரவு தாமதப்படும்.

**துலாம்** [ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். சுறுசுறுப்பாக பணிகளை ஆற்றி நல்ல பெயர் எடுப்பீர்கள். புனித யாத்திரைகளின் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும். புதிய செய்திகள் வர இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து போடுவதற்கு முன் நன்கு படித்த பின் கையொப்பம் இடவும்.

**விருச்சிகம்** [ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் மூலம் நன்மைகளும் ஏற்படும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். தடைப்பட்ட புத்திர பாக்கியம் ஏற்பட வாய்ப்புண்டு. தாமதப்பட்ட சுபகாரிய நிகழ்ச்சிகள் நடந்து, இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். புதிய விரிவாக்கங்கள் செய்வ தால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும்.

**தனுசு** [ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, எதிர்பாராத தனவரவு உண்டு. சிலருக்கு, சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கள் கிடைக்கும். வியாபார நிமித்தமாக செல்லும் பயணங்களால் சிறு, நன்மை ஏற்பட்டு, ஓரளவு, வெற்றிகரமான முன்னேற்றங்கள் ஏற்படும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ப இலாபமோ, பலனோ கிடைக்கும். அப்போதுதான் உங்கள் பணப் பெட்டியில் பணம் சேரும்.

**மகரம்** [ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் தாமதமான, சுபமங்கள காரியங்கள் நடக் கும். அதன் காரணமாக செலவுகள் ஏற்படும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். பயமும், தடைகளும் உங்கள் பெரும் முயற்சிகளுக்கு முட்டுக்கட்டை ஆவதை அனுமதிக்காதீர் கள். தட்டுங்கள் திறக்கப்படும். புதிய செயல்பாடு எனும் கிரீடத்தில் வைரமாக மின்னும்.

**கும்பம்** [ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]


இந்த வாரம் நீண்ட நாட்களுக்குப் பிறகு, பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை வாங்கும் எண்ணம் உருவாகும். சிலருக்கு உயர் ரக வாகனங்கள் கிடைக்கும். ஆனால், அவற்றில் செல்லும் போது எச்சரிக்கையுடன் செல்லுங்கள். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். சிலருக்கு, நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள்.

**மீனம்** [ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகளுக்கு எதிர் பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு.தொழிலில் புதிய திட்டங்களை தீட்டி முன்னேற முயல்வீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் ஒரு வருட ஆட்சி





வீரகத்தி தனபாலசிங்கம்

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு நாளை மறுதினம் செவ்வாய்கிழமையுடன் சரியாக ஒரு வருடம் நிறைவடைகிறது. 2024 செப்டெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் அவர் நேரடியாக முதற்சுற்று வாக்கு எண்ணிக்கையில் 50 சதவீதம், 1 வாக்குகளை பெறாவிட்டாலும், இலங் கையில் இடதுசாரி அரசியல் இயக்கத் தின் தலைவர் ஒருவர் ஜனநாயக தேர்த லின் மூலம் முதற்தடவையாக ஆட்சிய திகாரத்துக்கு வந்த முதல் சந்தர்ப்பமாக அது இலங்கை அரசியலில் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

அதேவேளை, தெற்காசியாவில் நேபாளத்துக்கு அடுத்ததாக ஆயுதக் கிளர்ச்சியொன்றை நடத்திய இடதுசாரி அரசியல் இயக்கம் ஒன்று தேர்தலின் மூலம் அதிகாரத்துக்கு வந்த இரண்டாவது நாடாகவும் திசநாயக்கவின் அந்த வெற்றி இலங்கையை வரலாற்றில் பதிவு செய்திருக்கிறது. முன்னென்றும் இல்லாத வகையில் இலங்கையில் மூன்று வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சியை (2022 அறகலய) தொடர்ந்து முற்றிலும் மாறுபட்ட அரசியல் சூழ்நிலையில் ஜனாதிபதியாக வந்த திசநாயக்கவிடமும் அவரது தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்திடமும் மக்கள் பெரும் எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் குறிப்பாக அதன் தலைமைத்துவ கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) தலைவர்கள் தாங்கள் உறுதியான அரசாங்கத்தை அமைப்பதற்கு போதுமான ஆசனங்களை தந்தால் போதும் என்று வெளிப்படையாகவே கேட்டபோதிலும் கூட நாட்டு மக்கள் அவர்களுக்கு பாராளு மன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான் மைக்கும் அதிகமான பலத்தை வழங்கி னார்கள். அதுவும் குறிப்பாக ஜே.வி.பி. யின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தாங்கள் மட்டுப்பாடில்லாத அதிகாரத்தை மக்களிடம் இருந்து கேட்கவில்லை என்றும் பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைப் பலத்தை தந்தால் போதும் என்றும் கூறினார்.

"புதிய அரசியல் கலாசாரத்தையும் முறைமை மாற்றத்தையும்" கொண்டுவரப்போவதாக தேசிய மக்கள் சக்தி தேர்தல்களின்போது வழங்கிய வாக்குறுதிகளை மக்கள் எந்தளவுக்கு நம்பினார்களோ தெரியவில்லை. ஆனால், பழைய பாரம்பரிய அரசியல் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் மீது தங்களுக்கு இருந்த கடுமையான வெறுப்பையும் ஆத்திரத்தையும் தேர்தல்களில் தெளிவாக வெளிப் படுத்தினார்கள்.

இத்தகையதொரு பின்புலத்திலேயே, ஜனாதிபதி திசநாயக்கவின் ஒரு வருடகால ஆட்சியின் செயற்பாடுகளை நோக்க வேண்டும்.

கடந்த வருடம் இரு தேசிய தேர்தல்களிலும் நாட்டு மக்களுக்கு தாங்கள் வழங்கிய பெருவாரியான வாக்குறுதிகளின் நடைமுறைச் சாத்தியமற்ற தன்மையை ஜனாதிபதியும் அரசாங்க தலைவர்களும் இப்போது ஒரு வருடம் கடந்த நிலையில் தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நம்பலாம்.

பொருளாதார இடர் பாடுகளில் இருந்து விடுபடுவதற்கு விரை வான நிவாரணங்களை அரசாங்கத்திடமி ருந்து எதிர்பார்த்த சனத்தொகையில் அதி கப் பெரும்பான்மையானவர்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைத்தது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் முன்னெடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைளின் விளைவாக மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பதால் அந்த உடன்படிக்கையை மீள்பேச்சுவார்த்தைக்கு உட்படுத்தப்போவதாக தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது. ஆனால், அதே உடன்படிக்கையின் நிபந்தனைகளை எந்த விதமான மாற்றமும் இன்றி பின்பற்றுவதை தவிர, புதிய அரசாங்கத்துக்கு வேறுவழி இருக்கவில்லை. உலக வங்கி போன்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் இலங்கையின் பொருளாதார நிலைவரம் குறித்து நேர்மறையான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்ற போதிலும், சமுதாயத்தின் பெரும்பான்மையான மக்களின் வாழ்க்கைத் தரங்களில் உருப்படியான எந்த மாற்றத்தையும் காண முடியவில்லை.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனையின் பிரகாரம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதாரக் கொள்கைகளையே தொடர்ந்து முன்னெடுக்கின்ற தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் அதன் சொந்த பொருளாதாரக் கொள்கைகளை எப்போது நடைமுறைப்படுத்தப் போகிறது என்பது எவருக்கும் தெரியவில்லை. முன்னைய ஆட்சியாளர்களை மக்கள் வெறுத்து ஒதுக்கிய காரணங்களை நன்கு உணர்ந்தவர்களாக ஜனாதிபதி திசநாயக்கவும் அரசாங்க தலைவர்களும் தங்களது நிருவாகம் ஊழலுக்குள் சிக்கிவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையுடன் செயற்படுகிறர்கள். கடந்த கால ஊழல்கள் மற்றும் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதிலும் அரசாங்கம் முனைப்புடன் செயற்படுகிறது. மற்றைய முனைகளில் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் ஒரு மந்தநிலை காணப்படுகிறது.

பதவிக்காலத்தின் முதல் வருடத்தில் ஒரு அரசாங்கத்திடமிருந்து நாம் எதிர்பார்பார்க்கக்கூடியவற்றுக்கு ஒரு மட்டுப்பாடு இருக்கிறது என்ற போதிலும், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஒரு வருடகால செயற்பாடுகள் அதன் எதிர்காலத் திசைமார்க்கத்தை மதிப்பிடுவதற்கு ஓரளவுக்கேனும் உதவும் என்பது நிச்சயம். ஜே.வி.பி.யின் கடந்தகால அரசியல் குறித்த பல்வேறு விமர்சனங்கள் இருந்தாலும், ஜனநாயக தேர்தல்களின் மூலமாக ஆட்சியதிகாரத்துக்கு வந்த பிறகு அந்த கட்சி தலைமையிலான அரசாங்கத்திடமிருந்து முற்றிலும் வேறுபட்ட அணுகுமுறைகளையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பழைய பாரம்பரிய அதிகார வர்க்க அரசியல் கட்சிளின் அரசாங்கங்களுக்கு சேவை செய்த அரசு இயந்திரத்தை வைத்துக் கொண்டு முறைமை மாற்றத்தைக் கொண்டு வருவது என்பது நடைமுறையில் எந்தளவுக்கு சாத்தியமாகும் என்பதை ஜே.வி.பி.யின் தலைவர்கள் தற்போது தெளிவாகப் புரிந்து கொண்டிருப்பார்கள். தங்களது கொள்கைகளின் பிரகாரம் அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு தடையாக இருக்கும் உயர்மட்ட அதிகாரிகள் தொடர்பில் சீற்றமடைந்த ஜே.வி.பி.யின் முக்கியமான அமைச்சர் கள் அண்மைக்காலங்களில் வெளியிட்ட கருத்துக்கள் அவர்களின் அந்த புரிதலின் வெளிப்பாடேயாகும். அடுத்த சுனாமி உயர்மட்ட அதிகாரிகளுக்கு எதிராகவே நிகழும் என்று கூட ஒரு அமைச்சர் கூறி னார். பழைய அரசு இயந்திரத்தைப் பொறுப்பேற்று நிருவகிப்பதையே ஒரு வருடகாலமாக தேசிய மக்கள் சக்தி செய்து வருகிறது.

இரு வாரங்களுக்கு முன்னர் நேபாளத்தில் இடம்பெற்ற மக்கள் கிளர்ச்சி, முடியாட்சியை முடிவுக்கு கொண்டுவந்த மாபெரும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்த கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆட்சியதிகாரத்துக்கு வந்த பிறகு முன்னெடுத்த ஜனநாயக பரீட்சார்த்தங்களின் தோல்வியை உலகிற்கு அம்பலப்படுத்தியது. அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக கடந்த நூற்றாண்டில் இரு தசாப்தகால இடைவெளியில் இரு ஆயுதக் கிளர்ச்சிகளை முன்னெடுத்த ஒரு இடதுசாரி அரசியல் இயக்கம் என்ற வகையில் ஜே.வி.பி. நேபாள நிகழ்வுகளை ஒரு படிப் பினையாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இலங்கையை பொறுத்தவரை, புதிய அரசியல் கலாசாரம் என்பது ஊழல், முறைகேடுகள், அதிகார துஷ்பிரயோகம் மற்றும் குடும்ப ஆதிக்க அரசியல் ஆகியவற்றை முடிவுக்கு கொண்டுவருவதுடன் மாத்திரம் நின்று விடுவதல்ல. இனத்துவ உறவுகளிலும் மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கு வழிவகுத்த தேசிய இனப்பிரச்சினைக்கு காணப்பட வேண்டிய அரசியல் தீர்வுக்கான அணுகுமுறையிலும் ஏற்படவேண்டிய முக்கியமான மாற்றத்தை பிரதிபலிப்பதாக அந்த புதிய அரசியல் கலாசாரம் அமைய வேண்டும்.

முன்னைய ஆட்சியாளர்களைப் போலன்றி ஜனாதிபதி திசநாயக்க சிறுபான்மைச் சமூகங்களுக்கு குறிப்பாக வடபகுதி தமிழர்களுக்கு நேசக்கரத்தை நீட்டுவதில் கூடுதல் அக்கறை காட்டுகிறார். பதவியேற்ற ஒரு வருடகாலத்தில் அடிக்கடி யாழ்ப்பாணத்துக்கு அவர் விஜயங்களை மேற்கொண்டிருக்கிறார். சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவதே தங்களது கொள்கை என்றும் ஓயாது பிரகடனம் செய்கிறார்.

ஆனால், கடந்த காலத்தில் அரசாங்கங்களினால் முன்னெடுக்கப்பட்ட இனப்பாகுபாட்டுக் கொள்கைளினாலும் ஒடுக்கு முறை நடவடிக்கைகளினாலும் பாதிக்கப் பட்டு வந்திருக்கும் சிறுபான்மைச் சமூகங் கள் அனுபவிக்கும் பிரத்தியேகமான பிரச் சினைகளுக்கு ஒரு இடைக் காலத் தீர்வுக ளையேனும் காண்பதில் அக்கறை காட் டாமல் சகலரையும் சமத்து வமாக நடத்து வதாக பிரகடனம் செய்வ தில் உண்மை யில் அர்த்தமில்லை என் பதை ஜனாதிபதி யும் அரசாங்கமும் புரிந்து கொள்வது அவசியம்.

ஜே.வி.பி.யை பொறுத்தவரை, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு குறிப்பாக அதிகாரப் பரவலாக்கத்தை செய்வதற்கு முன்னெடுக்கப்பட்ட சகல முயற்சிகளையும் கடுமையாக எதிர்த்த ஒரு கசப்பான கடந்த காலத்தைக் கொண்டிருக்கிறது. ஆட்சியதிகாரத்துக்கு வந்த பின்னராவது அந்த கடந்த காலத்தில் இருந்து வேறுபட்ட ஒரு போக்கை கடைப்பிடிப்பதில் தங்களுக்கு அக்கறை இருக்கிறது என்பதை ஜே வி.பி. தலைவர்கள் இதுவரையில் வெளிப்படுத்தவில்லை. ஜனாதிபதி திசநாயக்க போன்றவர்களை இனவாதிகள் என்று கூறுவதை விடவும் இனவாதத்தின் கைதிகள் என்று அழைப்பதே பொருத்தமாகும்.

இனத்துவ உறவுகளும் தேசிய இனப்பிரச்சினையும் இதுகாலவரையில் சிங்கள அரசியல் சமுதாயத்தினாலும் தமிழ் அர சியல் சமுதாயத்தினாலும் கையாளப்பட்ட முறை காரணமாக இலங்கையின் இனப்பி ளவு தொடர்ந்தும் ஆழமானதாகவே இருந் துவருகிறது. அத்தகைய கவலைக்குரிய நிலைவரத்தை மாற்றியமைப்பதற்கு சிறு பான்மைச் சமூகங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது மாத்திரமல்ல, பெரும்பான்மைச் சமூகத்தையும் பழைய சிந்தனைப் போக்கில் இருந்து விடுபட வைக்கக் கூடிய மார்க்கத்தில் பயணம் செய்வதற்கு ஜனாதிபதியும் அரசாங்கமும் இனிமேலாவது தயாராக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த காலத்தை கையாளுவது என்பது போர்க்குற்றங்களை பற்றியது மாத்திரமல்ல!

சர்வதேச சமூகத்திடமிருந்து வருகின்ற பதில்கள் அல்லது பிரதிபலிப்புக்கள் குறித்து இலங்கை திருப்தியடைவதற்கு காரணம் இருக்கிறது. மூன்று வெவ்வேறு சர்வதேச கண்காணிப்பு அமைப்புக்கள் அரசாங்கத்துக்கு நல்ல மதிப்புரையை வழங்க தீர்மானித்திருக்கின்றன.

முதலாவது அமைப்பு சுவீடனில் தலைமையகத்தை கொண்ட ஜனநாயகம் மற்றும் தேர்தல் உதவிக்கான சர்வதேச நிறுவனமாகும். அதன் 2025 ஆம் ஆண்டுக்கான உலக ஜனநாயக நிலைவரம் தொடர்பான சுட்டெண்ணில் இலங்கை 15 இடங்கள் முன்னோக்கிப் பாய்ந்திருக்கிறது. கடந்த வருடம் இந்த சுட்டெண்ணில் 173 நாடுகள் மத்தியில் இலங்கை 58 வது இடத்தில் இருந்தது.

இந்த உயர்வு மக்களினால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம், கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் ஆகியவற்றில் பெற்ற பயன்களை பிரதிபலிக்கிறது. சிவில் ஈடுபாடு மற்றும் தேர்தல் பங்கேற்பு தொடர்பில் உயர்மட்டத்தில் முதல் 25 சதவீதமான நாடுகளில் இலங்கை மேலும் உயர்வாக வந்திருக்கிறது என்றும் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

உலகவங்கியின் 2025 ஆம் ஆண்டுக்கான அறிக்கையிலும் அரசாங்கத்துக்கு பாராட்டு கிடைத்திருக்கிறது. அதன் வரலாற்றில் மிகப்பெரிய வருவாய்ச் சீர்ப்படுத்தல் செயன்முறையை முன்னெடுத்திருக்கும் இலங்கை பொருளாதாரத்தை நிலையுறுதிப்படுத்துவதில் "குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை" கண்டிருக்கிறது என்று உலகவங்கியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. "1980 ஆம் ஆண்டுக்கு பிறகு உலகின் 123 க்கும் அதிகமான நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட இதே போன்ற 330 முயற்சிகளுடன் ஒப்பிடும்போது சர்வதேச நியமங்களை பொறுத்தவரை இலங்கையின் வருவாய்ச் சீர்ப்படுத்தல் கடுமுனைப்பானதாகவும் விரைவானதாகவும் இருக்கிறது."

"சகல இலங்கையர்களினதும் நன்மைக்காக பொது நிதியைப் பயன்படுத்துவதில் கவனம் செலுத்தக்கூடிய நிலையில் இலங்கை இப்போது இருக்கிறது" என்றும் அறிக்கை கூறியிருக்கிறது. அரசாங்க செலவினத்தை சிறந்த முறையில் சமாளித்தால் பொருளாதார வளர்ச்சிக்கு பாதகமில்லாமல் 2029 ஆம் ஆண்டளவில் நிகர உள்நாட்டு உற்பத்தியில் சுமார் இரண்டு சதவீதத்தினால் இலங்கை வருமானத்தை உயர்த்தமுடியும் என்று அறிக்கை முடிவில் கூறியிருக்கிறது.

ஜெனீவாவில் தற்போது நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரிலும் எதிர்பார்க்கப்பட்டதை விடவும் அரசாங்கம் சிறப்பாக செயற்பட்டது. மனித உரிமைகள் பேரவையின் 47 உறுப்பு நாடுகளில் 43 நாடுகளின் ஆதரவு தனக்கு இருப்பதாக அரசாங்கம் உரிமை கோரியது மிகைப்படுத்தல் போன்று தெரிகிறது. ஏனென்றால் அந்த 47 நாடுகளில் 6 நாடுகள் இலங்கை மீதான தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்குகின்றன. ஆனால், வெவ்வேறு பிராந்தியங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பல நாடுகள் இலங்கையின் உள்நாட்டு முயற்சிகளுக்கு ஆதரவாக பேசியிருப்பதுடன் சர்வதேச தலையீட்டை கண்டனம் செய்துமிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் இலங்கை தொடர்ந்து ஊடாட்டங்களை செய்துவருவதை அந்த நாடுகள் ஒத்துழைப்பின் ஆதாரம் என்று வரவேற்றிருக்கின்றன. அத்துடன் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சீர்திருத்தங்களுக்கும் காணாமல்போனோர் தொடர்பான விவகாரங்களை கையாளுதல், காணிகளை திருப்பிக் கையளித்தல் மற்றும் பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் போன்ற விடயங்களில் கவனத்தைச் செலுத்துகின்ற ஆட்சிமுறை விவகாரங்கள் தொடர்பில் காணக்கூடியதாக இருக்கின்ற தெளிவான முன்னேற்றத்துக்கும் அங்கீகாரமும் கிடைத்திருக்கிறது. உண்மையான சவாலாக விளங்கும் இனங்களுக்கு இடையிலான அதிகாரப்பகிர்வின் மூலவேர்க் காரணிகளுடன் இவை சம்பந்தப்பட்டவையாகும்.


மாகாணசபை தேர்தல்களை தாமதமின்றி நடத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையிடமிருந்தும் இந்தியாவிடமிருந்தும் நெருக்குதல்கள் பிரயோகிக்கப்பட்டு வருகின்றன. அரசியலமைப்புக்கான 13 வது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கோரியிருக்கும் மனித உரிமைகள் பேரவையின் 2025 தீர்மான வரைவு உண்மையான அதிகாரப் பகிர்வின் தேவையையும் வலியுறுத்தியிருக்கிறது.

மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடரில் உரையாற்றிய இந்திய பிரதிநிதி இந்த விடயத்தை பிரத்தியேகமாக வலியுறுத்தினார். "இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாகவும் பயனுறுதியுடைய முறையிலும் நடைமுறைப்படுத்தி விரைவாக மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டும் என்றும் அர்த்தமுடைய முறையில் அதிகாரப் பரவலாக்கத்தை செய்யவேண்டும் என்றும் இந்தியா தொடர்ச்சியாக வலியுறுத்திவருகிறது" என்று இந்திய பிரதிநிதி கூறினார்.

வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தனது பதிலில், " எல்லைநிர்ணயச் செயன்முறைகள் நிறைவடைந்ததும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழு மாகாணசபைகளுக்கான தேர்தல்களை நடத்தும்" என்று கூறினார். ஆனால், மேலும் தாமதிக்காமல் மாகாணசபை தேர்தல்களை நடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலனை செய்வதாக செய்திகள் வெளியாகின்றன.

விரைவாக மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதன் மூலம் ஜனநாயகம் தொடர்பில் அரசாங்கம் அதன் நம்பகத்தன்மையை மேம்படுத்த வேண்டியது அவசியமாகும். இறுதியாக மாகாணசபை தேர்தல்கள் 2014 ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. ஆனால், 2017 ஆம் ஆண்டில் மாகாணசபை தேர்தல் சட்டத்தை மாற்றுவதற்கான முயற்சி தோல்விகண்ட பிறகு தேர்தல்கள் நடத்தப்படவில்லை.

விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையில் இருந்து பழைய தொகுதி அடிப்படையிலான தேர்தல் முறையும்




**நேர்மை மற்றும் பகிரப்பட்ட அதிகாரத்தின் ஊடாக ஒன்றிணைப்பதற்கு தலைமைத்துவத்தைக் கொடுப்பதா அல்லது பழைய பாகுபாடுளையும் வாக்குறுதிகளைப் பலவீனப்படுத்தும் தாமதங்களையும் அனுமதிப்பதா என்பதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முன்னால் இப்போது உள்ள தெரிவாகும்.**

கலந்ததாக தேர்தல் முறையை புதிதாக மாற்றுவதற்கு தேவையான தொகுதிகள் மீள்வரைவு தொடர்பில் அரசியல் கட்சிகள் எடுத்த முரண்பாடான நிலைப்பாடுகள் காரணமாக தேர்தல் சீர்திருத்தங்கள் தடங்கலுக்கு உள்ளாகியிருப்பதே பிரச்சினையாக இருக்கிறது. புதிய எல்லை நிர்ணயச் செயன்முறை சிக்கலானதாகவும் நீண்ட காலத்தை எடுக்கக் கூடியதாகவும் இருப்பதால், அடுத்த தேர்தலுக்காக 1988 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் சட்டத்துக்கு திரும்பிச்செல்வது குறித்த யோசனை பரிசீலனையில் இருக்கிறது.

மாகாணசபை தேர்தல்களை நடத்த வேண்டியதன் முக்கியத்துவம் இரண்டு மடங்கானது. பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் மிகையான பெரும்பான்மைப் பலத்துக்கு முகங்கொடுக்கும் எதிர்க்கட்சிகள் மாகாணசபை தேர்தல்களில் சிறப்பான செயற்பாட்டை வெளிக்காட்டுவதன் மூலம் இழந்த செல்வாக்கில் கொஞ்சமாவதை மீளப்பெறலாம் என்று எதிர்பார்க்கின்றன. மாகாணசபைகள் மக்களுக்கு நெருக்கமான இரண்டாவது அரசியல் அதிகார அடுக்காகும்.

மாகாணசபைகள் உகந்த முறையில் இயங்குமாக இருந்தால், அவற்றின் முழுமையான அரசியல் கண்காணிப்பின் கீழ் முழுஅளவில் அரசாங்க சேவைகள் முன்னெடுக்கப்படும். இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் அதிகப் பெரும்பான்மையாக வாழ்கின்ற அல்லது பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்ற மாகாணங்களும் இருப்பதால் அதிகாரப் பகிர்வில் ஒரு இனத்துவப் பரிமாணத்தையும் மாகாணசபைகள் கொண்டுவரும். சிறுபான்மைச் சமூகக் கட்சிகளின் பிரதிநிதிகளாக மாகாண சபைகளுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் அந்த சமூகங்களின் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடையவர்களாக இருப்பார்கள்.

பெருந்தோட்டத் துறையில் தபால் சேவைகளில் உள்ள பிரச்சினையை உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம்.



கலாநிதி ஜெகான் பெரேரா

அரசாங்க அதிகாரிகளினதும் பாதிக்கப்பட்ட சமூகங்களின் சிவில் சமூகப் பிரதிநிதிகளினதும் பங்கேற்புடன் தேசிய சமாதானப் பேரவை ஏற்பாடு செய்த கூட்டம் ஒன்று இந்த பிரச்சினையையும் வேறு பல பிரச்சினைகளையும் வெளிக்கொணர்ந்தது. பெருந்தோட்டங்களில் வீடமைப்பு உட்கட்டமைப்புகளில் பெருமளவானவை ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களை குடியமர்த்துவதற்கு பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களினால் கட்டப்பட்ட லயன் அறைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவே தொடர்ந்தும் இருக்கின்றன.

பழுதடைந்ததும் தகரக்கூரைகளை கொண்டதுமான இந்த கட்டமைப்புகளுக்கு தபால் விலாசங்கள் கிடையாது. அதன் விளைவாக, லயன் அறைகளில் வாழ்கின்ற மக்கள் முக்கியமான கடிதங்களை பல நாட்களை அல்லது வாரங்கள் தாமதித்தே பெறுகிறார்கள். இந்த தாமதங்கள் அவர்களின் தவறு அல்ல. ஆனால், அவர்கள் தொழில் வாய்ப்புக்களை, பாடசாலை மற்றும் பல்கலைக்கழக அனுமதிகளையும் கூட இழக்கக்கூடும்.

கடந்த காலத்தைக் கையாளுவது என்பது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கவனம் செலுத்துகின்ற போர்க்குற்றங்களை பற்றியது மாத்திரமல்ல, இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் இருந்து மலையக தமிழ்ச் சமூகத்துக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதிகளை சீர்ப்படுத்துவதுமாகும். சுதந்திர இலங்கையின் முதலாவது அரசாங்கம் அநியாயமான முறையில் மலையக தமிழ்ச் சமூகத்தின் குடியுரிமையை பறித்தது. அந்த மக்கள் சமத்துவமான - தகுதியான குடிமக்களாக தங்களுக்கு உரித்தான இடத்தை இன்னமும் மீளப்பெறவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி "அட்டன் பிரகடனத்தை" செய்தது. அதில் பெருந்தோட்டத் துறையில் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு சமத்தவமான குடிமக்களுக்கு உரித்தான உரிமைகளையும் மேம்பட்ட வாழ்க்கைத் தரத்தையும் உறுதி செய்வதாக தேசிய மக்கள் சக்தி அந்த பிரகடனத்தில் உறுதியளித்தது. தற்போது அங்கீகரிக்கப்பட்ட உடைமையைக் கொண்டிராத நிலங்களுக்கு உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படுவதும் தோட்டப்பகுதிகளில் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதற்கு பயிர்செய்யப்படாமல் இருக்கும் அல்லது கைவிடப்பட்டிருக்கும் நிலங்களை பயன்படுத்துவதும் உறுதிசெய்யப்படும் என்றும் அந்த சமூகத்தின் மத்தியில் உள்ள வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கப்படும் என்றும் உறுதியளிக்கப்பட்டது. அந்த உறுதிமொழிகளை நடைமுறைப்படுத்துவதற்கான உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

சகல மக்களினதும் நன்மைக்காக பயன்படுத்தக்கூடியதாக அரசாங்கத்துக்கு பெருமளவுக்கு நிதிச் சுதந்திரம் கிடைக்கும் என்று உலக வங்கியின் ஆய்வு கூறுகிறது. அத்தகைய சூழ்நிலையை பயன்படுத்தி பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மலையக தமிழ் மக்களின் அவசரமான பிரச்சினைகளுக்கு தாமதமின்றி தீர்வைக்காண வேண்டும், தீர்வைக்காண முடியும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் மனித உரிமைகள் பேரவையில் வெளியிட்ட தனது அறிக்கையில் "மலையக தமிழ்ச் சமூகத்துக்கான ஆதரவுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியது அவசியமாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.


நான் சந்தித்த நுவரேலியா மாவட்டச் செயலகத்தைச் சேர்ந்த அரசாங்க அதிகாரிகளிடமிருந்தும் சிவில் சமூகப் பிரதிநிதிகளிடமிருந்தும் மெச்சத்தக்க நல்லெண்ண உணர்வு வெளிப்பட்டது. அதிகார நிறுவனங்கள் திறந்த மனதுடன் செயற்பட்டால், குறைபாடுகள் தீர்த்து வைக்கப்பட்டால், சட்டத்திலும் நடைமுறையிலும் உரிமைகள் மீள அளிக்கப்பட்டால், ஆட்சிமுறையில் ஒரு திருப்புமுனை ஏற்பட முடியும். நேர்மை மற்றும் பகிரப்பட்ட அதிகாரத்தின் ஊடாக ஒன்றிணைப்பதற்கு தலைமைத்துவத்தைக் கொடுப்பதா அல்லது பழைய பாகுபாடுளையும் வாக்குறுதிகளைப் பலவீனப்படுத்தும் தாமதங்களையும் அனுமதிப்பதா என்பதே தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் முன்னால் இப்போது உள்ள தெரிவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபையை ஆட்சி செய்தபோது மந்திரிமனையை மறந்திருந்தவர்கள் மாகாண தேர்தலுக்கு அழுகிறார்கள்!

பனங்காட்டான்





**. கிடைக்கும் சந்தர்ப்பத்தை முறையாகப் பயன்படுத்தி தமிழரின் வரலாற்றுச் சின்னங்களை பேணிப்பாதுகாக்க அமைச்சர்கள் ஓடிவரும் நிலை தொடருமானால், மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறின் அதிலும் அவர்களின் கரங்களே பலமடையும் நிலை இலகுவாகும்.**

தேர்தல் காலங்கள் போன்று தெற்கிலிருந்து அமைச்சர்கள் தமிழ்ப் பகுதிகளுக்கு விஜயம் மேற்கொள்வது இப்போது வாராந்த நிகழ்வாகியுள்ளது. அதற்கும் மேலாக அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் வடக்கில் அநேகமாக தினமும் ஒரு நிகழ்விலாவது பங்குபற்றி வருகிறார். அவரோடு தேசிய மக்கள் சக்தியின் தமிழ் எம்.பிக்களும் கலந்து கொள்கிறார்கள்.

கறுப்புக் கொடி காட்டி, சிங்கக் கொடியை எரித்து அமைச்சர்களை தமிழர்கள் வரவேற்ற காலம் போய்விட்டது. 1958ல் பண்டாரநாயக்க அரசில் அமைச்சராகவிருந்த ஏ.பி.ஜெயசூரியாவின் யாழ்ப்பாண விஜயம் பிரபல்யமானது. அவர் பயணம் செய்த வாகனத்தின் முன்னால் வீதியில் சிங்கக்கொடியை எரித்த பல தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நையப்புடைக்கப்பட்டது 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகத்துக்கு முக்கியத்துவம் பெற்றுக்கொடுத்தது.

அந்தக் காலம் இப்போது முழுமையாக மாறிவிட்டது. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் என்பவர்கள் கொழும்பிலிருந்து தரை வழியாக வாகனத்தில் யாழ்ப்பாணம் வந்து போகிறார்கள். ஆட்சியாளர்களின் ஆதரவாளர்கள் தமிழ் பிரதேசங்களின் அபிவிருத்திகளை தீர்மானிப்பவர்களாகவும், அரச நிர்வாகக் கூட்டங்களுக்கு தலைமை தாங்குபவர்களாகவும் இன்றுள்ளனர்.

முள்ளிவாய்க்காலுக்குப் பின்னரான காலப்பகுதி எதிர்பாராத பல மாற்றங்களை கண்முன்னால் காட்டி நிற்கிறது. இலங்கைத் தமிழர்களின் தலைவர் யார் என்பது தெரியாமல் இருப்பதானது இந்த மாற்றங்களில் முக்கியமானது.

ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாசவை ஆதரிக்க தமிழரசுக் கட்சி எடுத்த முடிவு, முகம் காட்டாத இன்னொரு தரப்பினர் மறைந்திருந்து ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்தது, தமிழர்களின் அடையாளத்தை வெளிப்படுத்த பொதுவேட்பாளரை நிறுத்தியபோது அதனை தமிழ்த் தேசிய கட்சிகளே எதிர்த்தது என்பவை தமிழர்களுக்கு ஒரு தலைவர் இல்லையென்பதை பகிரங்கமாக எடுத்துக் காட்டிய சில.

ஜனாதிபதி தேர்தலில் அநுர குமர வெற்றி பெறுவாரென்று தமிழர் தரப்பில் எந்தவொரு அணியினரும் கற்பனை பண்ணிக்கூட பார்க்கவில்லை. தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர் தரப்பு தோல்வியைக் கண்டது. இதன் பலனாக வடக்கு கிழக்கின் சகல மாவட்டங்களிலிருந்தும் அநுர குமரவின் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் தெரிவாகினர். இதுகூட தமிழ்த் தேசிய கட்சிகள் எதிர்பார்க்காததுதான். இறுதியில் இடம் பெற்ற உள்ளாட்சித் தேர்தலையும் தேசிய மக்கள் சக்தி விட்டு வைக்கவில்லை.

இப்போது மாகாண சபைத் தேர்தலை நோக்கி எம்மவர்கள் கோசம் எழுப்புகின்றனர். காணி அதிகாரம், காவற்துறை அதிகாரம் இல்லாத இச்சபைகளின் கதிரைகளில் ஏறி அமர்வதற்கு ஏற்பட்டுள்ள பதவி ஆசையின் வெளிப்பாடு இது. 1987ல் ஜே.அர்.ஜெயவர்த்தனவும், ராஜிவ் காந்தியும் இணக்கத்துக்கு வந்த இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் 13ம் திருத்தமும், மாகாண சபை முறைமையும் அங்கீகாரம் பெற்றன. இதன் அடிப்படையில் வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைக்கான தேர்தல் 1988 நவம்பரில் இடம்பெற்றது. வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்த்து ஜே.வி.பி. (அநுர குமரவின் தாய்க்கட்சி) 2006ல் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மூன்று மனுக்களின் அடிப்படையில் இணைப்பு ரத்துச் செய்யப்பட்டது.

அதற்குப் பின்னர் வடமாகாண சபைக்கு ஒரேயொரு முறை தேர்தல் நடைபெற்றது. இதற்கென கொழும்பிலிருந்து இறக்கப்பட்ட நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியின் தலைமையிலான தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மொத்தம் 30 உறுப்பினர்களை இதில் பெற்றது. ஐக்கிய மக்கள் சுதந்திர அணி 7 ஆசனங்களையும், முஸ்லிம் காங்கிரஸ் கட்சி ஓர் ஆசனத்தையும் பெற்றன. ஆறில் ஐந்துக்கும் மேலான வெற்றியை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்றும் அதனால் ஆக்கபூர்வமான எதனையும் நிறைவேற்ற முடியவில்லை.

முதலமைச்சர் விக்கினேஸ்வரனுக்கு எதிராக சுமந்திரன் தலைமையிலான அணி முன்னெடுத்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் மட்டுமே நினைவில் இருக்கக் கூடிய ஒரு சாதனை. அப்போது கட்சியின் தலைவராகவிருந்த இரா.சம்பந்தன் இதனை நிராகரித்ததால் சுமந்திரனின் முயற்சி கைகூடாது போனது என்றே கூற வேண்டும்.

இத்தனை விடயங்களையும் இப்போது மீண்டும் நினைவு கூருவதற்கான காரணம், அதே வடமாகாண சபையின் முதலமைச்சராக அடுத்த தேர்தலில் தாம் போட்டியிடவிருப்பதாக சுமந்திரன் தமது விருப்பத்தை தெரியப்படுத்தியிருப்பதும், இதற்காகவே மாகாண சபைத் தேர்தலை தாமதிக்காது நடத்த வேண்டுமென தமிழரசுக் கட்சி தொடர்ந்து கருத்து வெளியிட்டு வருவதும் இப்போது பேசுபொருளாக இருப்பதால்.

வடக்கு மாகாண சபையை சுட்டி சில விடயங்களை எழுதும்பொழுது, நெஞ்சில் முள் குத்துவது போன்ற வேதனையைத் தருவது நல்லூர் மந்திரிமனையின் இன்றைய நிலை. யாழ்ப்பாணம் நல்லூரை இராசதானியாகக் கொண்டு தமிழ் மன்னர் அரசாட்சி புரிந்ததின் அடையாளமாக இருப்பவைகளில் முக்கியமானது இந்த மந்திரிமனை. பருத்தித்துறை வீதியில் நல்லூர் முத்திரைச் சந்திக்கும் சட்டநாதர் சுவாமி கோவிலுக்கும் இடையில் யமுனா வீதிக்கு முன்பாக இந்த மந்திரிமனை கட்டிடம் உள்ளது.

பராமரிப்பின்மையால் இடிந்து விழக் கூடிய நிலைமையில் பல காலமாக இந்தக் கட்டிடம் இருந்துள்ளது. கட்டிடத்தின் பல இடங்களில் வெடிப்புகள் காணப்பட்டன. கட்டிடத்தோடு சம்பந்தப்பட்ட பல பொருட்கள் களவாடப்பட்டுள்ளன. போர்க்கால குண்டுவீச்சுகள், விமானத் தாக்குதல்களால் இக்கட்டிடத்துக்கும் தாக்கம் ஏற்பட்டது.

தமிழர் தேசத்தின் பாரம்பரிய சின்னமாக பேணப்பட்டு வந்த மந்திரிமனையைச் சுற்றி இராச வீதி, இராணி வீதி, குமார வீதி, சங்கிலியன் வீதி, யமுனா வீதி, பண்டாரக்குளம் வீதி, இராச பாதை என்பன உள்ளன. யாழ்ப்பாணம் மாநகர சபை தற்காலிகமாக அமைந்துள்ள பண்டார வளவும் இதற்கு அருகில்தான் உள்ளது.

யாழ்ப்பாண இராசதானியின் ஞாபகார்த்தமாக விளங்கும் மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண்டிய சின்னமாக 2011ல் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டது. இந்தப் புராதன கட்டிடத்தை புனரமைக்கவும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தொல்பொருள்துறைசார் அதிகாரிகள், உள்ளாட்சித்துறை ஆர்வலர்கள், பொதுத்தொண்டு நிறுவன பிரதிநிதிகளைக் கொண்ட குழுவும் இவ்விடயத்தில் ஆர்வம் காட்டியது. சிறுசிறு பாதுகாப்புப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், மந்திரிமனை அமைந்துள்ள காணி தனியார் ஒருவருக்குச் சொந்தமாக இருந்தமையால் அவரது அனுமதியின்றி எதனையும் தொடர முடியாத நிலையால் அனைத்தும் முடக்க நிலைக்கு வந்தன.

வடக்கு மாகாணத்தில் மாகாண சபை ஆட்சி நடைபெற்ற காலத்தில் இந்தக் கட்டிடத்தை ஏன் அவர்கள் கவனிக்கவில்லையென்ற கேள்வி பலரிடம் உள்ளது. 38 உறுப்பினர்களைக் கொண்ட இச்சபையில் 30 உறுப்பினர்கள் தமிழரசுக் கட்சியை தலைமையாகக் கொண்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகளாக இருந்தும் இவ்விடயத்தில் அவர்கள் பாராமுகமாக ஏன் இருந்தனர் என்பது கூட பலர் மனதையும் குடைந்து கொண்டிருக்கிறது.

வடமாகாண சபையின் தலைவராகவிருந்தவர் உயர் நீதிமன்ற நீதியரசராகவிருந்த சி.வி.விக்கினேஸ்வரன். இப்பதவிக்கு வருவதற்கு முன்னர் பல மாவட்டங்களில் நீதிபதியாக இருந்ததோடு இலங்கை சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகவும் இருந்தவர். சங்கிலி மன்னன் ஆட்சியோடு சம்பந்தப்பட்ட மந்திரிமனை கட்டிடத்தை புனரமைக்க வேண்டியதன் அவசியத்தை ஏன் இவர் மறந்திருந்தார் என்பதுகூட பலருக்கும் புரியாதுள்ளது.

வடமாகாண சபை இயங்கிய காலத்திலிருந்து இன்றுவரை இதன் அக்கிராசனராகப் பதவி வகிப்பவர் திரு. சி.வி.கே. சிவஞானம். பல வருடங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகியாக, ஆணையாளராக, விசேட ஆணையாளராக பதவி வகித்தவர். மந்திரிமனை காணிக்கு முன்னால் ஒரு கூப்பிடு துாரத்தில் இவரது இல்லம் அமைந்துள்ளது. இவை அனைத்துக்கும் மேலாக வடமாகாண சபையை நிர்வகித்து வந்த தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத்தலைவராக பதவி வகித்து வந்தவரும் இவரே.

தினமும் வீட்டிலிருந்து புறப்பட்டு வெளியே செல்லும்போது மந்திரிமனையை தரிசிக்காது இவரால் பயணித்திருக்க முடியாது. மாகாண சபையின் உறுப்பினராக மக்களால் தெரிவு செய்யப்பட்டு

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரெஹான் ஃபசல்

# பிரபாகரனின் கடைசி தருணம்: இலங்கை இறுதிக்கட்டப் போரில் என்ன நடந்தது?

2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை உள்நாட்டுப் போரின் இறுதிக் கட்டத்தில் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்டு விட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. அந்த இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டதாகவும் அறிவிக்கப்பட்டது.

ஆனால், விடுதலைப் புலிகள் ஆதரவாளர்களில் ஒரு பிரிவினர் இன்றும் அதனை ஏற்க மறுக்கின்றனர்.

இப்படியான சூழலில், பிரபாகரனின் கடைசி தருணங்கள் குறித்து இந்த கட்டுரை அலசுகிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் 2008ம் ஆண்டு, நவம்பர் 27-ஆம் தேதி மாவீரர் தினத்தை முன்னிட்டு ஆற்றிய உரையே அவருடைய கடைசி உரையாக பதிவாகியுள்ளது.

அதற்கடுத்த சில மாதங்களில் அவருடைய வாழ்க்கை முடிவுக்கு வரும் என்று யாரும் நினைக்கவில்லை, ஆனால் அவருடைய வாழ்வின் கடைசி தருணம் வரை அவருடைய மனோபாவம் மாறவே இல்லை.

1976ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் அமைப்பை தொடங்கினாலும் கூட பிரபாகரன் நீண்ட காலமாக பெரிதும் அறியப்படாத ஒருவராகவே திகழ்ந்தார்.

1982 மே மாதம் சென்னையில் முதலும் கடைசியுமாக பிரபாகரன் பிடிபட்ட போது, இந்திய அரசு அவர் மீது அதிக கவனம் செலுத்தவில்லை.

அடுத்த சில ஆண்டுகளில் இந்தியாவின் ராணுவத்திற்கு சவால் விடுவதற்கும் தயங்காத வகையில், பிரபாகரனின் செல்வாக்கு மற்றும் நம்பிக்கை அபரிமிதமாக அதிகரித்தது.

### பிரபாகரனின் பாணி

இலங்கையின் புனித நகரமான அனுராதபுரத்தில் சிங்களர்கள் கொலைக்குப் பிறகு, பிரபாகரன் குறித்து பெரும் விவாதம் எழுந்தது.

அதன்பிறகு, இலங்கையில் போட்டி தமிழ் அமைப்புகளின் தலைவர்கள் அடுத்தடுத்து கொலை செய்யப்பட்டனர். இது, தமிழர்கள் மத்தியில் தனிப்பெரும் தலைவராக உருவாவதற்கான முயற்சியாகவே நம்பப்பட்டது.

பிரபல பத்திரிகையாளர் எம்கே நாராயண் சுவாமி தன்னுடைய ‘தி ரௌட் ஆஃப் பிரபாகரன்’ (*The Route of Prabhakaran*) எனும் புத்தகத்தில், “பிரபாகரனின் ஒவ்வொரு வார்த்தையும் சட்டம் போன்றது. அவரை யாரும் சவால் செய்ய முடியாது. அவருக்கு முன் தலை தாழ்ந்து, அவர் சொல்லும் அனைத்தையும் ஏற்றுக்கொண்டால் மட்டுமே, உங்களால் தமிழ் ஈழத்துக்காக போராட முடியும்,” என எழுதியுள்ளார்.

“அவருடன் உடன்படவில்லையென்றால், ஒன்று நீங்கள் விடுதலைப் புலிகளை விட்டு வெளியேற வேண்டும், அல்லது உலகை விட்டு நீங்க வேண்டும். அவரை எதிர்க்கும் யாராக இருந்தாலும் அவர் ‘துரோகி’ என அறிவிக்கப்படுவார். சோவியத் முன்னாள் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தன்னுடைய எதிரிகளை எப்படி நடத்தினாரோ, அவர் அப்படி நடத்தப்படுவர்.”




### அடுத்தடுத்து நடந்த கொலைகள்

விடுதலைப் புலிகள் அமைப்பு இலங்கையில் மட்டுமல்லாது, இந்தியாவிலும் குறிப்பிட்ட சிலருக்கு குறிவைத்தது. பிரபாகரனுக்கோ அல்லது விடுதலைப் புலிகள் அமைப்புக்கோ சில சமயங்களில் உதவியிருந்தவர்களும் கூட இலக்காயினர்.

பிரபல பத்திரிகையாளரும் எழுத்தாளருமான அனிதா பிரதாப், தன்னுடைய ‘ஐலாண்ட் ஆஃப் பிளட்” (*Island of Blood*) எனும் புத்தகத்தில், “பிரபாகரனின் ஆரம்ப கால வாழ்க்கை குறித்து புத்தகம் எழுத திட்டமிட்டிருந்த நபர் ஒருவர், பாரிஸில் தன்னுடைய இல்லத்தின் முன்பாக சுட்டுகொலை செய்யப்பட்டார்.” என எழுதியுள்ளார்.

இலங்கை பாதுகாப்பு அமைச்சர் தனது அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்த போது கொலை செய்யப்பட்டார். வெளியுறவு அமைச்சர் (தமிழர்) ஒருவர் நீச்சல் குளத்தில் இருந்தபோது படுகொலை செய்யப்பட்டார். இலங்கை ஜனாதிபதி ஒருவரும் மே தின பேரணியில் உரையாற்றியபோது கொலை செய்யப்பட்டார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தி, தமிழ் நாட்டில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது தற்கொலை தாக்குதலில் கொலை செய்யப்பட்டார்.








### பிரபாகரனின் சரிவு

ஒரு கட்டத்தில், இலங்கையின் மூன்றில் ஒரு பங்கு நிலப்பரப்பை தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த பிரபாகரனின் கட்டுப்பாடு ஒரு கால்பந்து மைதானம் அளவுக்கு சுருங்கும் நேரம் வந்தது.

“முதன் முறையாக விடுதலைப் புலிகள் அமைப்பு போராளிகளின் கண்களில் நான் பயத்தை பார்த்தேன். பல ஆண்டுகளாக விடுதலைப் புலிகளை நெருங்கி பார்த்துவரும் எனக்கு இது முற்றிலும் புதிய விஷயமாக இருந்தது,” என பெயர் குறிப்பிட வேண்டாம் என கேட்டுக்கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

“மே 17 அன்று, பிரபாகரன் தன் நெருங்கிய கூட்டாளிகளிடையே, தான் போர்க்களத்திலிருந்து ஓடவோ அல்லது ஆயுதங்களை கைவிடவோமாட்டேன் என்றும், யாராவது போராட்டத்திலிருந்து விலகிக்கொள்ள விரும்பினால், அதை அவர்கள் தாராளமாக செய்யலாம் என்றும் கூறினார். குடிமக்களுடன் இணைய யாராவது விரும்பினால், அவர்கள் தங்கள் ஆயுதங்களை கைவிட்டு அங்கே செல்லலாம். எதிரியின் கைகளால் வீழ்த்தப்படுவதை தவிர்க்கும் விதமாக யாரேனும் இறக்க விரும்பினால், சயனைடை உட்கொண்டு இறக்கலாம்.”

சூரிய கடவுளின் அவதாரம் என்றும் யாராலும் வீழ்த்தப்பட முடியாதவர் என்றும் தன் ஆதரவாளர்களால் அழைக்கப்பட்ட ஒருவருக்கு இது மோசமான பிரியாவிடையாக இது இருந்தது.



### பிரபாகரனும் எட்டாம் எண்ணும்

தான் விரும்பிய அனைத்தையும் சொல்வதற்கு மே 17ஆம் தேதியை பிரபாகரன் தேர்ந்தெடுத்தது தற்செயல் நிகழ்வு அல்ல.

பிரபாகரனின் பழைய கூட்டாளியான ராஜேஷ் குமார் பிரிட்டனில் வசிக்கிறார், அவர் தற்போது ராகவன் எனும் பெயரில் அறியப்படுகிறார்.

அவர் கூறுகையில், “பிரபாகரன் 8 எனும் எண்ணை துரதிருஷ்டவசமான எண்ணாக கருதினார். பிரபாகரன் எந்தவொரு வேலையையும் 8, 17 மற்றும் 26 ஆகிய தேதிகளில் செய்வதை தவிர்ப்பார், அது எதிர்காலத்தில் பிரச்னைகளை ஏற்படுத்தும் என கருதினார். இந்த நாட்களில் மறைவிடத்திலேயே நாள் முழுவதும் பதுங்கியிருந்து அடுத்த நாளே வெளியில் வரும் அளவுக்கு அவருக்கு அதன் மீது வலுவான மூடநம்பிக்கை இருந்தது” என்றார்.

2008ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், மன்னார் மாவட்டம் இலங்கை ராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. அதன்பின், நவம்பர் மாதத்தில் விடுதலைப் புலிகள் வியூக ரீதியாக தங்களின் முக்கிய இடங்களான பூநகரி மற்றும் மாங்குளத்திலிருந்து வெளியேற வேண்டியிருந்தது.


2008ஆம் ஆண்டு மே மாதம், விடுதலைப் புலிகளின் மிகவும் அனுபவம் வாய்ந்த தளபதி கண்டிய பாலசேகரன் எனும் பால்ராஜ் மாரடைப்பில் இறந்தது பிரபாகரனுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.

பாலசேகரனின் நினைவாக மூன்று நாள் துக்கம் அனுசரிப்பதாக விடுதலைப் புலிகள் இயக்கம் அறிவித்தது. பாலசேகரன் இறந்திருக்காவிட்டால், இலங்கை ராணுவத்துடனான போரின் முடிவு வேறு விதமாக இருந்திருக்கும் என, அந்த அமைப்பைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் நம்புகின்றனர்.

2009ஆம் ஆண்டுவாக்கில் பிரபாகரன் மேலும் அதிகமான பின்னடைவுகளை சந்திக்க ஆரம்பித்தார். இலங்கை அரசுப் படைகள், முதலில் பரந்தன் நகரத்தையும் பின்னர் அதன் அருகிலுள்ள கிளிநொச்சியையும் கைப்பற்றின. இதில், கிளிநொச்சி, விடுதலைப் புலிகளால் நிர்வகிக்கப்படும் பகுதிகளின் தலைநகரமாக கருதப்பட்டது. கிளிநொச்சியில் தோல்வியடைந்தது, விடுதலைப் புலிகள் அமைப்பினரின் மன உறுதியை கடுமையாக குலைத்தது.

இந்த சமயத்தில் தான் வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை பிரபாகரன் சந்தித்தார்.

விடுதலைப் புலிகளின் முக்கியமான ஊடக ஒருங்கிணைப்பாளராக இருந்த வேலாயுதன் தயாநிதி எனும் தயா மாஸ்டர் மற்றும் பிரபாகரனின் உரைகளை மொழிபெயர்த்த குமார் பஞ்சரத்னம் எனும் ஜார்ஜ் இருவரும் இலங்கை ராணுவத்திடம் சரணடைந்ததால் விடுதலைப் புலிகள் அமைப்பினருக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது.




அப்போது ஜனாதிபதியாக மஹிந்த ராஜபக்ஸவும், அவரது இளைய சகோதரர் கோட்டாபய ராஜபக்ஸ பாதுகாப்பு அமைச்சராகவும் இருந்தனர். விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான ராணுவ நடவடிக்கைக்கு கோட்டாபய ராஜபக்ஸ தலைமை வகித்தார்.

எம்ஆர் நாராயண் சுவாமி எழுதுகையில், “சண்டையை உடனடியாக முடிவுக்குக் கொண்டு வருமாறு அமெரிக்காவிடமிருந்து கோட்டாபய ராஜபக்ஸ பெரும் அழுத்தத்தை சந்தித்தார். அமெரிக்க குடியுரிமையையும் கொண்டுள்ள கோட்டாபய ராஜபக்ஸ, பேச்சுவார்த்தை நடத்திய அமெரிக்க பிரதிநிதிகளிடம் எவ்வித உறுதியையும் அளிக்கவில்லை. எனினும், இதுதொடர்பான தன்னுடைய கவலைகளை ராணுவ தளபதிகளிடம் மே 14-ஆம் தேதி பகிர்ந்துகொண்டார்,” என எழுதியுள்ளார்.

“இன்னும் எவ்வளவு காலம் இந்த போர் தொடரும் என அவர் கேள்வியெழுப்பினார். இந்த போர் கூடிய விரைவில் வெற்றியுடன் முடிவுற வேண்டும், இல்லையெனில், அமெரிக்காவின் அழுத்தத்தை எதிர்கொள்வது கடினமாகிவிடும்.”

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலாந்தன்

# திலீபன் வானிலிருந்து பார்த்துக் கொண்டிருப்பது எதனை?

திலீபனின் நாட்களில் யுத்த களத்தில் வெற்றிகள் கிட்டும் என்ற ஒரு நம்பிக்கை ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த காலங்களில் இருந்தது. அவருடைய நினைவு நாள் ஒன்றில் யாழ் கோட்டை வெற்றி கொள்ளப்பட்டதிலிருந்து அந்த நம்பிக்கை தோன்றியது. திலீபனின் பசிக்கும் தாகத்துக்கும் அவ்வாறு அபரிதமான சக்தி உண்டு என்ற ஒரு நம்பிக்கை.

ஆனால் 2009க்கு பின்னர் திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? அல்லது திலீபனை யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதும் நிலைமை காணப்படுகிறது.

கடந்த 16 ஆண்டுகளிலும் நினைவு கூர்தலை அரசாங்கம் தடுக்கும் போதெல்லாம் தமிழ்க் கட்சிகள் ஏதோ ஒரு விதத்தில் ஒன்றுபட்டு அவற்றை அனுஷ்டிப்பதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன்பு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி திலீபனின் ஒளிப்படம் தாங்கிய ஊர்தியை நகர்த்திய பொழுது திருகோணமலையில் அந்த வாகனம் தாக்கப்பட்டது. அந்தச் சம்பவம் தமிழ்த் தேசியக் கட்சிகளை கட்சி கடந்து ஒன்றாக்கியது. ஆனால் அரசாங்கம் நினைவு கூர்தலை தடுக்காது தளர்வாக நடந்து கொள்ளும் போதெல்லாம் குறிப்பாக திலீபனின் நாட்களில் திலீபன் யாருக்கு சொந்தம்? நினைவுத் தூபியில் யார் யார் நினைவு கூரலாம்? என்று கேட்டு மோதல்கள் வெடிக்கின்றன. சில சமயம் இந்த மோதல்கள் ஊடகச் சந்திப்புகள் வரை வருகின்றன.

திலீபன் உண்ணாவிரதம் இருந்தது நல்லூர் வளாகத்துக்குள். ஆனால் அது ஒரு கோயில் வளாகம் என்பதனால் அங்கே நினைவுத் தூபியை வைக்க அனுமதிக்கப்படாத காரணத்தால் அது நல்லூர் வளாகத்துக்கு வெளியே இப்போது இருக்கும் இடத்திற்கு கொண்டுவரப்பட்டது. அது திலீபன் உயிர் நீத்த இடம் அல்ல. எனவே திலீபனை நினைவு கூர முற்படுபவர்கள் அந்த இடத்துக்குத்தான் வரவேண்டும் என்று இல்லை. அந்தச் சூழலில் பல காணிகள் உண்டு மண்டபங்கள் உண்டு. அதனால் திலீபனை மெய்யாக விசுவாசமாக நினைவுகூர வேண்டும் என்று கருதும் கட்சியோ செயற்பாட்டாளர்களோ இடத்துக்காக அடிபடத் தேவையில்லை. இங்கு இடம் ஒரு பிரச்சினையே அல்ல. திலீபனை எப்படி நினைவு கூரலாம்? அதன்மூலம் அவருடைய நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம்? அதன் மூலம் அவருடைய தியாகத்தின் ஆன்ம பலத்தை எப்படி நீதிக்கான தமிழ் மக்களின் போராட்டத்துக்கு உந்து சக்தியாக மாற்றலாம்? என்று சிந்திப்பதுதான் இங்கு முக்கியம்.

திலீபனின் நினைவு நாளில் அவருடைய ஒளிப்படம் ஏந்திய வாகனத்தை வடக்கு கிழக்காக நகர்த்துவது ஒரு நல்ல ஏற்பாடு. நல்லூரில் அவருடைய நினைவுகளை பகிரும் ஒளிப்படக் காட்சியை வைப்பதும் ஒரு நல்ல ஏற்பாடு. குருதிக் கொடையும் நல்லது. இவற்றைவிட புதிதாகவும் யோசிக்கலாம். இப்பொழுது தமிழ் மக்களுக்குத் தேவையாக இருப்பது தமிழ் மக்களின் கவனத்தையும் குறிப்பாக ரிக்ரொக் தலைமுறையின் கவனத்தை, கொழும்பின் கவனத்தை, உலகத்தின் கவனத்தை ஈர்க்கத்தக்க படைப்புத்திறன்மிக்க அறவழிப் போராட்ட வடிவங்கள்தான்.

கடந்த 15ஆம் திகதி திலீபனின் நினைவு நாளுக்கு முன்னதாக கொழும்பில் சிங்களப் படைப்பாளியான சந்தரசி சுதுசிங்க எழுதிய நூல் ஒன்று வெளியிடப்பட்டது. திலீபன் என்று பெயரிடப்பட்ட அந்த நூலில், இரண்டு அத்தியாயங்கள் திலீபனை மையமாக வைத்து எழுதப்பட்ட படைப்புகளைக் கொண்டுள்ளன. தமிழ்த் தேசியப் பரப்புக்கு வெளியே வேறு இனங்களும் திலீபனைக் கொண்டாடுவது திலீபனுக்கு மகிமையே. தமிழ் மக்களின் போராட்டத்துக்கு மகிமையே. அமைச்சர் சந்திரசேகரன் திலீபனின் நினைவுத் தூபிக்கு அஞ்சலி செலுத்துவது திலீபனுக்கு மகிமையே. திரைப்படக் கலைஞர் சோமிதரன் கூறுவதுபோல "அஞ்சலி செலுத்த வந்தவரும் ஓர் அரசியலைச் செய்ய வருகிறார். அவரைத் தடுத்து நிறுத்தியவர்களும் தங்களுக்கான அரசியலைச் செய்கிறார்கள்" என்பதே உண்மை.



திலீபன் ஓர் ஆயுதப் போராளி. ஆனால் அவர் உயிர் நீத்தது ஓர் அறவழிப் போராட்டத்தில். அவருடைய வழியை விசுவாசமாகப் பின் தொடர்கிறவர்கள் தான் அவரை அஞ்சலிக்கலாம் என்றால், கடந்த 16 ஆண்டுகளாக அவரைப் போல சாகும்வரை உண்ணாமல் இருக்க எத்தனை பேர் தயாராக இருந்திருக்கிறார்கள்? உணவோ நீரோ இன்றி எத்தனை நாள் இருக்கலாம் என்பது உபவாசம் இருந்தவர்களுக்குத்தான் தெரியும். அதிலிருந்து தப்பினாலும் அதனால் உடல் உறுப்புகளுக்கு ஏற்பட்ட சேதங்களில் இருந்து தப்ப முடியாது.

கடந்த 16 ஆண்டுகளாக குறிப்பாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களின் பெற்றோர் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்திருக்கிறார்கள். எனினும் அப்போராட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டன. அது சரி. ஏனென்றால் ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்கள்தான் திரும்பத்திரும்ப தியாகம் செய்ய வேண்டும் என்றில்லை. கட்சிகளும் செயற்பாட்டாளர்களுந்தான் அவர்களுக்காகப் போராட வேண்டும்.



> தியாகிகளை நினைவு கூர்வது என்பது தொண்டு செய்வது் தன்னாலியன்ற தியாகத்தைச் செய்வது. இவ்வாறு தியாகிகளை நினைவு கூரும் விடயத்தில் படைப்புத்திறனோடும் தியாக சிந்தையோடும் சிந்தித்தால் புதிய வழிகள் திறக்கும். அவ்வாறு புதிய கற்பனைகள் தோன்றும்போது நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுவது தடுக்கப்படும்.



திலீபனைப்போல உயிர் பிரியும் வரை உண்ணாமலும் துளி நீரும் அருந்தாமலும் போராட எத்தனை பேரால் முடியும்? கடந்த 16 ஆண்டுகளாகத் தாங்கள் செய்ய முடியாத அல்லது தாங்கள் செய்யத் தயாரில்லாத தியாகங்களுக்கு உரிமை கோருபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. தாங்கள் செய்யத் தயாராக இல்லாத ஒரு தியாகத்துக்கு உரிமை கோருபவர்களால் தான் உண்மையான தியாகம் கொச்சைப்படுத்தப்படுகிறது. தியாகம் செய்ய வேண்டிய காலங்களில் தப்பிப் பிழைத்தவர்கள் எல்லாம் இப்பொழுது தியாகத்தைப்பற்றி வகுப்பெடுக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்தக் கட்டுரை யாரையும் சாகச் சொல்லிக் கேட்கவில்லை. யாரும் சாகவும் வேண்டாம். செத்தது போதும். ஆனால் செய்யத் தயாராக இல்லாத தியாகங்களுக்கு உரிமை கோரக்கூடாது. மாறாக அந்தத் தியாகிகளின் மகிமையை, நினைவுகளை எப்படி மக்கள் மயப்படுத்தலாம் என்று சிந்திக்கலாம். அதிலாவது உண்மையாக இருக்கலாம். தியாகிகளை அஞ்சலிக்கும்போது விளக்கு கொளுத்துவது மலர்களை வைப்பது போன்றவை வழமையான வழிகள். வாகன ஊர்தி, ஒளிப்படக் காட்சி, குருதிக் கொடை போன்றன ஒப்பீட்டளவில் வித்தியாசமானவை. ஆனால் இவற்றுக்கும் அப்பால் புதிய படைப்புத்திறன் மிக்க வழிகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

உதாரணமாக தியாகியின் நாட்களில் ஊர் ஊராக அவருடைய நினைவுகளைப் பரவலாக்கும் விதத்தில் என்ன செய்யலாம் என்று சிந்திக்கலாம். நினைவுகளை தலைமுறைகள் தோறும் கடத்துவதிலும் மக்கள் மயப்படுத்துவதிலும் கலை பண்பாட்டுச் செயற்பாடுகள் பெரிய பங்காற்ற முடியும். எனவே புதிய கலை வடிவங்களைப் பற்றிச் சிந்திக்கலாம். தியாகிகளின் நாட்களில் இசை நிகழ்ச்சிகளை ஒழுங்குப்படுத்தி இசை அஞ்சலிகளை இசை வேள்விகளைச் செய்யலாம். அந்த இசை வேள்விகளுக்குப் பிராந்திய, அனைத்துலகக் கலைஞர்களைக் கொண்டு வரலாம். இது ஒரு வழி.

இரண்டாவது வழி, தியாகியின் பெயரால் போட்டிகளை ஒழுங்குபடுத்தலாம். கவிதைப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி, நாடகப் போட்டி, விவாதப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள்.

மூன்றாவது வழி, தியாகிகளின் நாட்களில் அரசியல் கருத்தரங்குகளை வைத்து அந்த தியாகத்துக்கு பின்னால் இருக்கும் அரசியலை ஆழமாக ஆராயலாம்.

நாலாவதுவழி, தியாகிகளின் பெயரால் தொண்டு செய்யலாம். ஊர் ஊராக சிரமதானங்களைச் செய்யலாம். ஊர்க் குளத்தை, நீரோடும் வாய்க்கால்களைத் தூர் வாரலாம். ஊரைத் துப்புரவாக்கலாம். மரம் நடலாம். இப்படித் தியாகியின் பெயரால் பசுமைத் திட்டங்களை முன்னெடுக்கலாம்.

ஐந்தாவது வழி, தியாகிகளின் பெயரால் இலவச மருத்துவ முகாம்களை ஒழுங்குபடுத்தலாம். மருத்துவத் துறை ஒரு இண்டஸ்ட்ரியாக மாறி ஏழைகளுக்குத் தூரமாகப் போய்க் கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், இலவச மருத்துவ முகாம்களை தியாகிகளின் பெயரால் ஒழுங்கமைக்கலாம். உதாரணமாக அரச பொது மருத்துவமனைகளில் குறிப்பிட்ட சில சத்திர சிகிச்சைகளுக்காகக் காத்திருப்பவர்களின் தொகை ஆயிரக்கணக்கானது என்று கூறப்படுகிறது. அவ்வாறான சத்திர சிகிச்சைகளை இலவசமாக தியாகிகளின் பெயரால் செய்யலாம்.

அதாவது தியாகிகளை நினைவு கூர்வது என்பது தொண்டு செய்வது; தன்னாலியன்ற தியாகத்தைச் செய்வது. இவ்வாறு தியாகிகளை நினைவு கூரும் விடயத்தில் படைப்புத்திறனோடும் தியாக சிந்தையோடும் சிந்தித்தால் புதிய வழிகள் திறக்கும். அவ்வாறு புதிய கற்பனைகள் தோன்றும்போது நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுவது தடுக்கப்படும். எங்கே நினைவு கூர்தல் ஒரு சடங்காக மாறுகிறதோ அங்கே நினைவுகூர யாருக்கு உரிமை அதிகம் என்று கேட்டுச் சண்டைகளும் அதிகரிக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் அரச தலைவர்கள் மீதான நடவடிக்கைகள் அரசாங்கத்துக்கு ஏற்றமா அல்லது இறக்கமா?

- கந்தையா அருந்தவபாலன்

அனுரகுமார ஜனாதிபதியாகப் பதவியேற்று ஓராண்டு நிறைவடையும் தறுவாயில் இலங்கை அரசியலில் பல அதிரடிக்காட்சிகளைக் காணமுடிகிறது. இக்காட்சிகள் ஒருவகை யில் திகில் கதையில் அல்லது திரைப்படத்தில் ஒருவர் பரபரப்பாக எதிர்பார்ப்பதைப்போல அடுத்து என்ன அல்லது யார் என்ற கேள்வியை மக்கள் மத்தியில் தோற்றுவித்து வருவதையும் அவதானிக்க முடிகிறது.


முன்னாள் ஜனாதிபதிகள்மீது அநுர அரசாங்கம் அண்மையில் மேற்கொண்ட முக்கியமான நடவடிக்கைகள் இந்தப் பரபரப்பைத் தோற்றுவித்துள்ளன. ஒன்று ரணில் விக்கிரமசிங்கவின் கைது. மற்றது முன்னாள் ஜனாதிபதிகளுக்கான அரசின் சிறப்புச் சலுகைகளின் மட்டுப்பாடு. சமகாலத்தில் பாதாள உலக முக்கிய புள்ளிகளின் கைது, ஐஸ் போதைப் பொருள் உற்பத்திக்கான முக்கிய வேதிப் பொருள் பெருமளவு கண்டு பிடிக்கப்பட்டமை, இவற்றுடன் பொது ஜன பெரமுனவின் முக்கிய அரசியல் வாதிகள் தொடர்புபடுத்தப்படுதல் போன்றனவும் அடங்கும். ரணிலின் கைது தொடர்பான செய்திகளும் விமர்ச னங்களும் மறையுமுன் மகிந்த, மைத்திரி, சந்திரிகாவின் வீடுகள் மாறும் படலம் உலாவரத் தொடங்கிவிட்டது.

தேர்தல் காலத்தில் மக்களுக்குத் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதாக இவை தொடர்பாக அரசாங்கம் கூறி வரும் அதேவேளை வழமை போலவே இதற்குச் சார்பான - எதிரான விமர்சனங்களும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. எவ்வாறாயினும் அரசாங்கத்தின் இவ்வா றான முன்னெடுப்புக்கள் மக்கள் மத்தி யில் அதற்கான ஆதரவை அதிகரிக்கி றதா அல்லது இழக்கச் செய்கிறதா என்பது இலங்கை அரசியலில் முக்கியமான ஒரு விவாதப் பொருளாக மாறி வருகிறது.

இலங்கை அரசின் முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள் 1986 ஆம் ஆண்டு 4 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டு அதே ஆண்டு பெப்ருவரி 18 ஆந்திகதி நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இலங்கையின் முதலாவது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் இரண்டாவது பதவிக்காலத்தில் இச்சட்டம் கொண்டுவரப்பட்டது.

இச் சட்டத்திற்க மைய வாழ்நாள் காலத்துக்கு அவர்க ளுக்கு அல்லது அவர்களின் விதவைகளுக்கு வீடு, ஒய்வூதியம் மற்றும் செயலகம், போக்குவரத்து போன்றவற்றுக்கு ஒரு கபினட் தர அமைச்சருக்கான கொடுப்பனவை ஒத்த சலுகைகளைப் பெறுவதற்கான உரிமை வழங்கப்பட் டது. இவற்றைவிட அவர்களின் பாது காப்பு உட்பட பல்வேறு பணிகளுக்கும் அரச செலவில் பெருமளவான ஆளணிகளும் வழங்கப்பட்டன. இத்தேவைகளுக்காக பல மில்லியன் ரூபாக்கள் ஆண்டு தோறும் அரச திரட்டிய நிதியிலிருந்து வழங்கப்பட்டது. இவற்றுள் ஒய்வூதியம் மற்றும் ஆளணிகள் தவிர்ந்த ஏனைய உரிமைகளை மீளக்கைவாங்குவதற்காக 2025 ஆண்டு18 ஆம் இலக்கச் சட்டம் இம் மாதம் பத்தாம் திகதி பாராளுமன்றத்தில் 151 வாக்குகளால் நிறவேற்றப்பட்டு உடனடியாகவே சபாநாயகர் கையொப்பமிட்டதுடன் அன்றைய நாளே அச் சட்டம் வலுவுக்கும் வந்துவிட்டது.

இலங்கையின் முன்னைய ஆட்சியாளர்கள் மக்களுக்கு நன்மையளிக்கும் சட்டங்களை ஆக்க மறந்தாலும் தமக்குத் தேவையான சட்டங்களை ஆக்க ஒரு போதும் பின்நின்றதில்லை. காலத்துக்குக் காலம் அரசியலமைப்பு உட்பட பல சட்டங்களை தமக்கேற்ற வகையில் முன்னைய ஆட்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர். இவற்றுள் ஏனைய தேசிய இனங்களுக்கு எதிரான சட்டங்களும் அடங்கும். இதன் முன்னோடி ஜே.ஆர். ஜெயவர்த்தனே என்றாலும் அதனை உச்சமாகப் பயன்படுத்தியது ராஜபக்ஷ தரப்பு எனலாம். இங்கு விவாதத்திற்குரிய கேள்வி என்னவெனில் இவ்வாறான சலுகைகள் சட்டரீதீயான உரிமைகள் என்ற பெயரில் அவர்களுக்குத் தொடர்ந்து வழங்கப்படவேண்டுமா



> அனுர அரசாங்கத்தின் மீதான மக்களின் அபிப்பிராயத்திலும் ஆதரவிலும் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் பெரும்பாலான மக்கள் இவற்றை வரவேற்பதாகவே தெரிகிறது. இதனால் தேசிய மக்கள் சக்தி இன்னும் வேகமாக இப்பாதையில் நடக்கும் என எதிர்வுகூற முடியும்

என்பதாகும். ஆம், கட்டாயம் வழங்கப்படவேண்டும் என்று ஒரு தரப்பினர் அதனை நியாயப்படுத்துகின்றனர்.

அதற்கு அவர்கள் முன்வைக்கும் முக்கிய வாதங்கள். ஒன்று நாட்டின் மிக உயர்ந்த பதவி ஜனாதிபதி. அத்தலைவருக்கு உயர்கௌரவம் வழங்குவது நாட்டின் கடமை. அதுமட்டுமன்றி இம்முறை இங்கு மட்டுமல்ல ஏனைய பல நாடுக ளிலுமுள்ள ஒன்றுதான். அத்துடன் அவர்களுக்கான இக்கொடுப்பனவுகள் அரசின் மொத்தச் செலவில் மிகமிச் சிறிய தொகை மட்டுமே. அவர்களின் இக்கருத்துகள் ஏற்றுக்கொள்ளக் கூடிய வைதான்.

இதே கருத்துடையவர்கள் தான் ரணிலின் கைதையும் விமர்சனம் செய்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானவர்கள் பாதிக்கப்படும் அரசியல் தரப்புகள் உச்சரிக்கும் “இவை அரசியல் பழிவாங்கல்” என்ற கருத்துடன் உடன் படுபவர்களாக உள்ளனர். அதேவேளை மறு புறத்தில் இவ்வாறான சலுகைகளை அவர்களுக்கு ஏன் மக்கள் வரிப்பணத்திலிருந்து வழங்க வேண்டும் என்று குரலெழுப்புவோரும் தமது பக்கத்தில் பல வாதங்களை முன்வைக்கின்றனர். இவர்கள் கௌரவப் படுத்தக் கூடிய தலைவர்கள் அல்லர். ஊழல் மற்றும் அதிகார முறைகேடுகள் ஈடுபட்ட அரசியல்வாதிகள். நாட்டு மக்கள் கஷ்டப்படும்போது சொகுசு வாழ்க்கை வாழ்ந்தவர்கள், வாழ்பவர்கள். உதாரணமாக கொரோனா காலத்தில் மக்கள் பலர் உணவுக்கே துன்பப்பட்டபோது மகிந்த 400 மில்லியன் ரூபா செலவழித்து தனது வீட்டை அலங்கரித்துள்ளார்.

அவருக்கும் அவரது மனைவிக்கும் மட்டும் பணி செய்ய 111 அரச பணியாளர்கள். மகிந்த இந்நாட்டின் குடிமகனா அல்லது மன்னனா? இவர்களுக்கு உண்மையில் வீடில்லையா? இந்நாட்டில் எத்தனை ஆயிரம் பேர் வீடின்றி உள்ளனர். அவர்களுக்கு வீடு வழங்குவதற்கு இத்தலைவர்கள் ஏன் முயலவில்லை. இவர்களில் எவரும் வீடின்றி வாழ்ந்த அல்லது குடிசையில் வாழ்ந்த சாமானியர்கள் அல்லர். பரம்பரை பரம்பரையாக வசதிகளுடன் வாழ்ந்துவந்த மேட்டுக் குடியினர்.

அது மட்டுமன்றி தமது ஆட்சிக் காலத்தில் நாட்டைக் கொள்ளையடித்து உள்நாட் டிலும் வெளிநாடுகளிலும் குவித்து வைத்துக் கொண்டிருப்பவர்கள். இவ்வாறான கருத்தை முன்வைப்பவர்கள் இன்னொரு முக்கியமான விமர்சனத்தையும் முன் வைக்கத் தவறவில்லை. ஜனாதிபதிகளுக்கு மட்டுமன்றி பாராளுமன்ற உறுப் பினர்களுக்கும் ஒய்வூதியம் வழங்குவது தவறானது என்பது இவர்களின் கருத்தாகும். ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினராக இருந்தால் அவர்களுக்கு ஒய்வூதியம் வழங்கப்படு கிறது. இந்த மட்டுப்பாடு ஜனாதிபதிக ளுக்கில்லை. சிலநாட்கள் ஜனாதிபதியாக இருந்தாலே போதும். எந்தவொரு அரச பணியாளனும் ஐந்தாண்டு சேவையுடன் ஒய்வூதியம் பெற முடியுமா?

பாராளுமன்ற உறுப்பினராக இருக்கும் போதே எவ்வளவு சலுகைகளை இவர்கள் வெளிப் படையாகப் பெறுகின்றனர். தமக்கு வழங்கப்படும் வாகனப் பெறுகையைக் கைமாற்றி இரண்டு, மூன்று கோடி களைப் பெறும் இவர்களில் பலர் தொடர்ந்து இரண்டு, மூன்று தடவைகள் உறுப்பினாராக இருக்கின்றனர். ஓர் அரச ஊழியன் வாழ்நாளில் கோடி களைப் பார்க்க முடியுமா? தேர்தல் காலத்தில் பல இலட்சங்கள அல்லது கோடிகளைச் செலவழித்தே வெற்றி பெறுகின்றனர். இவ்வாறானவர்களுக்கு இதுபோன்ற சலுகைகள் அவசியமா?

உண்மையில் அரசின் எந்தவொரு சலுகைகளும் உதவிகளும் தேவைப்படுபவர்களுக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும். ஆனால் இலங்கையில் அரசியல்வாதிகளுக்கு மட்டுமல்ல மக்களுக்கு வழங்கப்பட்ட பல மானியங்களும் அவ்வாறு இருந்ததில்லை. அரசியல் நோக்கங்களே அவற்றிற்கான பிரதான காரணங்களாக இருக்கின்றன. இவை நாட்டின் வளர்ச்சிக்குத் தடையாக இருப்பதாகப் பொருளாதார வல்லுனர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். இவ்வாறான இருபக்கக் கருத்துகளின் அடிப்படையிலேயே முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சலுகைகள் தற்போதைய அரசாங்கத்தினால் நிறுத்தப்பட்டமை பற்றிய மதிப்பீடு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இருதரப்பு வாதங்களையும் ஆழமாக நோக்கும்போது ஓர் உண்மை தெளிவாகிறது. சலுகைகளுக்குச் சார்பாகக் கருத்துரைப்பவர்கள் கூறுவதுபோல நாட்டின் முன்னாள் தலைவர்கள் கௌரவிக்கப்படவேண்டும் என்பதில் அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர்களும் உடன்படுகின்றனர். ஆனால் தற்போதுள்ள முன்னாள் ஜனாதிபதிகள் அந்தக் கௌரவத்துக்குத் தகுதியற்றவர்கள் என்பதே அவர்களின் நிலைப்பாடாக உள்ளது. இது அந்த அரசியல்வாதிகள் மீதான மக்களின் வெறுப்பு அல்லது விரக்தியின் வெளிப்பாடு. இது அந்த அரசியல்வாதிகள் தாமாகத் தேடிக்கொண்டது. நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் அர்ப்பணிப்பான தலைவர்களாக அவர்கள் இல்லாதிருந்ததற்கான தண்டனை. ‘அரகலய’ இதனையே உணர்த்தியது.

வேறுகாரணிகளும் இருந்தாலும் கூட, இங்கு மட்டுமல்ல பங்களாதேசத்திலும் நேபாளத்திலும் தோன்றிய நிலைமைகளுக்கான மூலகாரணி அந்த அரசியல் தலைவர்களின் செயற்பாடுகள் என்பதை எவரும் மறுக்கமாட்டார்கள். இலங்கையின் முன்னாள் தலைவர்களின் இத்தகைய பலவீனங்கள்தான் அனுர அரசாங்கத்தின் பலம். அவையே தேசிய மக்கள் சக்தியை ஆட்சிப்பீடத்தில் அமர்த்தியது. அவர்கள் தேர்தலின் போது மக்களுக்குக் கூறியவற்றைச் செய்யவேண்டுமென்பதற்கப்பால் தமது ஆட்சியை உறுதிப்படுத்தும் தேவையும் அவர்களுக்குள்ளது. ஏனெனில் இதே மக்கள் அவர்களுக்கு எதிராகவும் திரும்புவர் என்பது அவர்களுக்கும் தெரியும். தேசிய மக்கள் சக்தி தேர்தலின்போது அள்ளிக்கொட்டிய வாக்குறுதிகளை நிறவேற்றவில்லை என்றும், கூறியவற்றுக்கு மாறாகச் செயற்படுகின்றது என்றும் மக்கள் மத்தியில் பலமான முணுமுணுப்புகள் இப்போது தோன்றிவிட்டன என்பதும் உண்மை.

இந்தவிடத்தில் ஒரு உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். தேசிய மக்கள் சக்தி புரட்சியொன்றின் மூலம் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. நாட்டில் நிலவிய ஜனநாயக சட்ட வழிமுறைகளினூடாகவே அதைப் பெற்றுக்கொண்டுள்ளது. அதனால் அந்த வழிமுறைகளினூடாகத்தான் அதுநினைக்கும் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இவ்வழிமுறைகள் மூலம் நாட்டில் நீண்டகாலமாக நிலவிவரும் அரசியல் பொருளாதார சமூகக் கட்டமைப்புகளை ஒரே இரவில் முழுமையாக மாற்றிவிட முடியாது. அவ்வாறு முனைவது அனுர அரசு தற்கொலை செய்வதற்கு ஒப்பானது. படிப்படியாகத்தான் அம்மாற்றங்களை உருவாக்க முடியும். அதனால் அதனைப் புரிந்து கொள்ளாதவர்களதும் அவர்களை விரும்பாதவர்களதும் எதிர்மறையான விமர்சனங்களை அரசாங்கம் சகித்துக் கொள்ளத்தான் வேண்டும்.

இந்நிலைமையை வைத்து ஆட்சியதிகாரத்தையும் சௌகரியங்களையும் இழந்த தரப்புகள் மீண்டும் தம்மைப் பலப்படுத்திக் கொள்ளவே முனையும். அவையே இப்போது நிகழும் அரசியல் காட்சிகள். அந்தக்காட்சிகளின் ஒரு கட்டமே நாட்டுக்காக உழைத்த தம்மை தமது வீட்டிலிருந்து துரத்திவிட்டார்கள் என்று மக்களிடையே அனுதாபம் தேடும் நடிப்புகள். இவர்களின் இந்த நடிப்புகளும் அரசியல் கூட்டுகளும் எதிரான கோஷங்களும் நாட்டு மக்களிடையே எந்தளவுதூரம் எடுபடும்? சாதாரண மக்களிடையே இவை சலனங்களை தோற்றுவிக்கும் என்பதை மறுக்கமுடியாது. இவற்றை ஊதிப்பெருப்பிப்பதற்கான

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குலகில் குடியேற்ற எதிர்ப்பு நிலை:

ஐங்கரன் விக்கினேஸ்வரா




அண்மையில் அவுஸ்திரேலியாவிலும், லண்டனிலும் நடைபெற்ற குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்கள், அங்கு வாழும் புலம்பெயர்ந்தோர், குறிப்பாக தென் கிழக்காசிய சமூகத்தினரிடையே பெரும் கவலையையும் விவாதங்களையும் ஏற்படுத்தியுள்ளன.

லண்டனில் தீவிர வலதுசாரிகள் பேரணி, பல தசாப்தங்களில் பிரிட்டன் கண்டிராத வகையில், புலம்பெயர்ந்தோருக்கு எதிரான மிகப் பெரிய ஆர்ப்பாட்டமாக மாறியது. 2025 செப்டம்பர் 13ஆம் திகதி ஒன்றரை இலட்சம் பேர் பேரணியில் பங்கேற்றதால் மொத்த நகரமே குலுங்கியது. தீவிர வலதுசாரி ஆதரவாளரான டாமி ரொபின்சன் தலைமையில் "யுனைட் தி கிங்டம் (*Unite The Kingdom*)




## ஆஸி, பிரித்தானியாவில் வலதுசாரி இனவாதம்?

என்ற பெயரில் இந்த பேரணி முன்னெடுக் கப்பட்டது.

இதற்கு முன்பாக அவுஸ்திரேலியா நாடு முழுவதும் பல முக்கிய நகரங்களில் ஆகஸ்ட் 31 ஆம் திகதி 'மார்ச் ஃபார் அவுஸ்திரேலியா' (*March for Australia*) என்ற குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட பேரணிகளில் ஆயிரக் கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

அதிகப்படியான வெளிநாட்டினர் குடியேற்றத்தால் வளங்கள் மற்றும் சமூக ஒருங்கிணைப்பு பாதிக்கப்படுவதாக பேரணியில் குற்றம் சாட்டினர். இந்த போராட்டங்கள், சிட்னி, மெல்போர்ன், பிரிஸ்பேன் மற்றும் கான்பெரா போன்ற முக்கிய நகரங்களில் நடைபெற்றன.

அதிகரிக்கும் குடியேற்றம் மீதான கோபம் மற்றும் நாட்டின் எல்லைகளில் அரசாங்கம் கட்டுப்பாட்டை இழந்துவிட்டது என்ற கருத்தின் மீதான நம்பிக்கையால், லண்டனில் பெருமளவில் மக்கள் திரண்டனர். பல ஆர்ப்பாட்டக்காரர்கள், சட்டவிரோத குடியேற்றத்தை தடுத்து, அகதிகளுக்கு தஞ்சமளிக்கும் விதிகளை கடுமையாக்குவதன் மூலம், பிரிட்டன் தனது கட்டுப்பாட்டை மீட்டெடுக்க வேண்டும் என்றும் கூறினர்.

பிரித்தானிய கலாசாரம் அழிந்து வருவதாகவும், அதைப் பாதுகாக்கவே தாங்கள் இப் பேரணியில் வந்ததாகவும் தெரிவித்தனர். மேலும் பேச்சு சுதந்திரத்தை மீட்டெடுக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந்தன. குடியேற்றத்திற்கு எதிராகப் பேசும் சாதாரண மக்களுக்கு பேச்சு சுதந்திரம் இல்லை என்று பலரும் குறிப்பிட்டனர்.



இதற்கு முன்பாகவும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளில் வெளிநாட்டினர் குடியேறுவதை தடுக்க பல போராட்டங்கள், பேரணிகள் நடத்தப்பட்டன. இப்பேரணிகளில் இனவெறி கருத்துகளையும் பரவலாகப் பார்க்க முடிந்தது.

ஆனால் பிரிட்டனில் சமீப காலத்தில் நடந்த மிகப் பெரிய போராட்டமாக இது இருக்கிறது. புலம்பெயர்ந்தோர் மற்றும் இஸ்லாமியர்கள் நாட்டை விட்டு வெளியேற வலியுறுத்தி மத்திய லண்டன் போராட்டம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இதனிடையே மறுபக்கம் இனவெறிக்கு எதிராக நில்லுங்கள் என்ற முழக்கத்துடன் புலம்பெயர்ந்தோர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சிலர் பாதுகாப்பை மீறி புலம்பெயர்ந்த போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தினர். இதனால், போலீசார் மற்றும் குடியேற்ற எதிர்ப்பு போராட்டக்காரர்கள் இடையே மோதல் ஏற்பட்டது.

**ஆட்சி மாற்றம் கோரும் எலான் மஸ்க்:**

உலகின் மிக பெரிய பணக்காரரும், தீவிர வலதுசாரி ஆதரவாளருமான எலான் மஸ்கும் அமெரிக்காவில் இருந்தபடி வீடியோ மூலம் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார். பிரிட்டிஷ் நாட்டின் குடிமகனாக இருப்பதில் எப்போதும் ஒரு சிறப்பு உள்ளது. ஆனால், இப்போது இங்கு நடப்பதை நான் பிரிட்டனின் அழிவாகப் பார்க்கிறேன். மேலும், கீர் ஸ்டார்மர் அரசை உடனடியாக கலைக்க




**மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியாவிலும் தீவிர வலதுசாரி குழுக்களால் பரப்பப்படும் குடியேற்ற எதிர்ப்பு மனநிலை, சமூக நல்லிணக்கத்துக்கு ஒரு சவாலாக உள்ளது. இந்நிலை தொடர்வதை தடுக்க புலம்பெயர்ந்த சமூகங்கள் தங்கள் அடையாளத்தையும், பங்களிப்பையும் மேற்கத்திய நாடுகளில் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.**

வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

மேலும் இடதுசாரி கட்சிகளை கடுமையாக சாடினார். வன்முறை உங்களை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. பிரிட்டன் மெதுவாக அழிந்து கொண்டிருக்கிறது. நீங்கள் போராட வேண்டும் அல்லது உயிரிழக்க வேண்டும். உடனடியாக பாராளுமன்றை கலைத்து விட்டு தேர்தல் நடத்தப்பட வேண்டும். பிரிட்டனில் ஆட்சி மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என்றார்.

**அவுஸ்திரேலியாவில் குடியேற்ற எதிர்ப்பு பேரணி:**

ஆஸியில் குடியேற்ற எதிர்ப்புப் போராட்டங்களின் உச்சமாக "*March for Australia*" போன்ற நிகழ்வுகள் வெளிநாட்டினர் குடியேற்றத்தை எதிர்ப்பதோடு, அவுஸ்திரேலியாவின் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுக்க வேண்டும் என்றும் கோஷங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த எதிர்ப்பு போராட்டங்கள் வலதுசாரி மற்றும் நவ-நாஜிக் அமைப்புகளால் ஆதரிக்கப்பட்டன. வெளிநாட்டினர் குடியேற்றத்தைக் கட்டுப்படுத்துவது, அவுஸ்திரேலியாவின் பண்பாட்டு அடையாளத்தை மீட்டெடுப்பது என்ற அடிப்படையில் நவ-நாஜி மற்றும் வலதுசாரி அமைப்புகள் இந்த போராட்டங்களை ஆதரித்தன. மேலும் இந்தியனே வெளியேறு போன்ற இனவாதக் கோஷங்களும் எழுப்பப்பட்டன.

இது அவுஸ்திரேலியாவின் பல்லின கலாச்சார அடிப்படைக் கொள்கைகளுக்கு எதிரானது என்று விமர்சிக்கப்பட்டது. இத்தகைய இனவாத போராட்டங்கள் சமூகத்தில் பிளவுகளை ஏற்படுத்துவதாகவும், சமூகப் பாதுகாப்பு மற்றும் சகவாழ்வுக்கு அச்சுறுத்தலாக உள்ளதாகவும் ஆஸி உள்நாட்டு அமைச்சர் தெரிவித்துள்ளார்.




**சிட்னியில் வலதுசாரி பேரணி:**

பாரிய குடியேற்றத்தை முடிவுக்குக் கொண்டுவரவும், அவுஸ்திரேலியாவின் அடையாளத்தை மீட்டெடுக்கவும் அழைப்பு விடுத்து, நடந்த இந்த போராட்டங்கள் அவுஸ்திரேலிய புலம் பெயர் குடிமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்த போராட்டங்களை முன்னெடுப்பவர்கள் தங்கள் நிலைப்பாட்டை மறுபரிசீலனை செய்யுமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. மேலும் உள்துறை அமைச்சர் டோனி பேர்க் இந்த பேரணியை அவுஸ்திரேலிய அரசியல் கலாச்சார முறைக்கு மாறானது என்றும் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் இரண்டில் ஒருவர் வெளிநாட்டில் பிறந்தவராக அல்லது அவரது பெற்றோர் வெளிநாட்டில் பிறந்தவராக உள்ளனர். இதற்கு நவநாஜி மற்றும் வலதுசாரி அமைப்பினர் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

அவுஸ்திரேலியாவுக்கான பேரணி என்ற பெயரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் சிட்னி நகரில் சுமார் எட்டாயிரம் பேர் தேசியக் கொடியேந்தியபடி பங்கேற்றனர். இந்தப் போராட்டத்துக்கு ஆளும் அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்த போராட்டத்துக்கு எதிராக அகதிகள் நடவடிக்கை கூட்டமைப்பு பேரணி நடத்தியது. இதுகுறித்து அந்த அமைப்பின் செய்தித் தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், அவுஸ்திரேலியாவுக்கான பேரணி, தீவிர வலதுசாரி அமைப்பினரின் வெறுப்பு மற்றும் கோபத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என கூறப்பட்டுள்ளது.

இந்த போராட்டக்காரர்களின் முக்கிய கோரிக்கை, அவுஸ்திரேலியாவில் குடியேற்றத்தின் அளவை கட்டுப்படுத்த வேண்டும் என்பதாகும். அவர்கள் குடியிருப்பு, கல்வி, சுகாதாரம் போன்ற வளங்கள் மீது அழுத்தம் அதிகரித்துள்ளதாகவும், வீடுகளின் வாடகை உயர்ந்துள்ளதாகவும் வாதிடுகின்றனர்.

இந்த போராட்டங்களில் கலந்துகொண்ட சிலர், ஆங்கிலேயர்களால் ஆங்கிலேயர்களுக்காக கட்டப்பட்ட நாடு என்றும், புலம்பெயர்ந்தோர் வெளியேற வேண்டும் என்றும் கடுமையாக கருத்து தெரிவித்துள்ளனர்.

மெல்பேர்ணில் பூர்வக்குடி மக்களின் போராட்ட முகாம்மீது தீவிர வலதுசாரி போராட்டக்காரர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர். அங்கிருந்தவர்கள் மீது நவநாஜிகள் குழு கொடூரமாக தாக்குதல் நடத்தும் காணொளி வெளியாகியுள்ளது. இச்சம்பவத்தை விக்டோரியா மாநில அரசும் கண்டித்துள்ளது.

பூர்வக்குடி மக்களின் கொடிகளை, கறுப்பு ஆடை அணிந்த கும்பல் மிதித்துள்ளனர். இதுபோன்ற சம்பவங்கள் இந்த போராட்டங்களுக்கு பின்னால் உள்ள இனவெறி உணர்வை வெளிப்படுத்துவதாக கூறப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் உள்ள புலம்பெயர்ந்தோர் சமூகங்களில், இந்தியர்கள் இரண்டாவது பெரிய குழுவாக உள்ளனர். இதுவே, இந்த போராட்டங்களின் முக்கிய இலக்காக இந்தியர்கள் மாறுவதற்கு காரணமாக பார்க்கப்படுகிறது. இந்தியர்கள் தொழில்நுட்ப வல்லுநர்கள், மருத்துவர்கள் மற்றும் பொறியாளர்கள் போன்ற உயர் பணிகளில் அதிக அளவில் ஈடுபடுகின்றனர். ஆனால், சில குழுக்கள், இந்தியர்களின் குடியேற்றம் உள்ளூர் வேலைவாய்ப்பையும் சமூக அமைப்பையும் பாதிக்கிறது என்று தவறான தகவல்களைப் பரப்பி வருகின்றனர்.

**பிரிட்டனில் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான உணர்வு:**

2021-ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பிரிட்டனில் தெற்காசிய மக்கள் இரண்டாவது பெரிய இனக்குழுவாக உள்ளனர். இதில் இந்தியர்கள், பாகிஸ்தானியர்கள், வங்கதேசத்தவர்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர், தமிழர்களும் நேபாளிகளும் குறிப்பிட்ட அளவில் உள்ளனர்.

பிரிட்டனில் கடுமையான எல்லைக் கட்டுப்பாடு மற்றும் அகதிகளுக்கு தஞ்சமளிக்கும் கொள்கைகள் இருந்தாலும், பல தலைமுறைகளாக பிரிட்டனில் வாழும் இந்த தெற்காசிய சமூகங்கள் தாக்கத்தை உணர்கின்றன. தற்போது இஸ்லாம் மற்றும் சீக்கிய சமூகங்களுக்கு எதிரான

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாகாணசபையை ஆட்சி...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

அக்கிராசனராக பதவி வகிக்கும் இவர் கூட மந்திரிமனை விடயத்தில் அக்கறை காட்டாதது பற்றி விசனம் கொள்ள வேண் டியுள்ளது. கடந்த வாரம் பொழிந்த பெருமழையால் இக்கட்டிடத்தின் ஒரு தொகுதி பாதிக்கப்பட்டதால் நல்லூர் இராசதா னியை நினைவூட்டும் ஒரேயொரு மரபுரிமைச் சின்னமும் அழிந்து விடுமா என அக்கறையுள்ளவர்கள் கேட்கின்றனர்.

தையிட்டியிலும், குருந்தூர்மலையி லும், வெடுக்கு நாறிமலையிலும், வெரு கல்மலையிலும் பௌத்த வழிபாட்டுத் தலங்களை அமைப்பதற்காக அக்காணி களை அரசுடமையாக்க முடியுமென்றால், மந்திரிமனையைப் பாதுகாக்க அரசாங்கத்தினால் ஏன் நடவடிக்கை எடுக்க முடி யாதென்று கேட்பதில் நியாயமுண்டு.

தமிழ் அரசியற் பரப்பில் தமிழரசுக் கட்சியின் நாடா ளுமன்றக் குழுத்தலைவ ரான சிவஞானம் சிறிதரன் மட்டுமே இதனை எழுதும்வரை மந்திரிமனை இருக்கும் இடத்தைச் சென்று பார்வையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிக ளுடன் நிலை மையை ஆராய்ந்துள்ளார். அநுர அரசின் தரப்பிலிருந்து அமைச்சர்கள் பிமல் ரத் நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகரம், நாடாளுமன்ற உறுப்பினர் கூ.இளங்குமரன் ஆகியோர் தொல்லியல் திணைக் கள உதவிப் பணிப்பாளருடன் மந்திரிம னையைச் சென்று பார்வையிட்டுள்ளனர்.

மந்திரிமனை பாதுகாக்கப்பட வேண் டியது அவசியமென்று கூறியுள்ள அமைச் சர் பிமல் ரத்நாயக்க சம்பந்தப்பட்ட அமைச்சரோடு கலந்துரையாடி மந்திரிமனையை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென உறுதியளித்துள்ளார்.

கிடைக்கும் சந்தர்ப்பத்தை முறையா கப் பயன்படுத்தி, தமிழரின் தேவைகளைக் கவனிக்கவென அமைச்சர்கள் ஓடிவரும் நிலைமை தொடருமானால், மாகாண சபைக்கு தேர்தல் நடைபெறின் அதிலும் அவர்களின் கரங்களே பலமடைவது இலகுவாகும். ●

## மேற்குலகில் குடியேற்ற...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெறுப்பு பிரசாரங்கள் அதிகரித்து வருகின்றன. புலம்பெயர்ந்தோர் நீண்ட காலமாக பிரிட்டனின் மக்கள் தொகை, கலாசாரம் மற்றும் பொருளாதார அடையாளத்தை தக்கவைத்து வருகின்றனர். ஆனால், பிரெக்ஸிட்டுக்குப் பிறகு, தீவிர வலதுசாரி குழுக்கள் புலம்பெயர்ந்தோருக்கு எதிரான விரோதப் போக்கை அதிகரித்துள்ளன.

வளங்களின் பங்கீடு மற்றும் பொது பாதுகாப்பு குறித்த கவலைகளை தூண்டியுள்ள தவறான தகவல்கள், குடியேற்ற எதிர்ப்பு மற்றும் இஸ்லாமிய எதிர்ப்பு பிரசாரங்களை மேலும் தீவிரமாக்கியுள்ளன. லண்டன், பர்மிங்காம் போன்ற முக்கிய நகரங்களில் உள்ள மக்கள் தொகையில், கிட்டத்தட்ட நாற்பது வீதமான புலம்பெயர்ந்தவர்கள் உள்ளனர். இதனால், அவர்கள் வாய்ப்புகளையும் வளங்களையும் கைப்பற்றுவதாக ஒரு உணர்வு பரவியுள்ளது.

தீவிர வலதுசாரிகள் இதனை பிரிட்டன் நாடு முற்றுகையில் இருப்பதற்கான அடையாளமாக சித்தரிக்கின்றனர். அதேநேரம், பொருளாதார அழுத்தங்கள், அதிகரிக்கும் செலவுகள், வீடுகள் பற்றாக்குறை, அரசியல் நிலையற்ற தன்மை ஆகியவை குடியேற்றத்தை எளிதாக குற்றம் சாட்டக்கூடிய இலக்காக மாற்றியுள்ளன.

ஆஸி அரசு இந்த போராட்டங்களை கடுமையாக கண்டித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் பலம் அதன் பன்முகத் தன்மையிலும், அனைவரையும் உள்ளடக்கிய சமூக அமைப்பிலுமே உள்ளது என்று அரசு அதிகாரிகள் திட்டவட்டமாக தெரிவித்துள்ளனர். இனவெறி மற்றும் பாகுபாட்டை ஒருபோதும் பொறுத்துக்கொள்ள முடியாது என்றும் அரசு கூறியுள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் சில தீவிர வலதுசாரி குழுக்களால் பரப்பப்படும் குடியேற்ற எதிர்ப்பு மனநிலை, சமூக நல்லிணக்கத்துக்கு ஒரு சவாலாக உள்ளது. இத்தகைய நிகழ்வுகள், புலம்பெயர்ந்த சமூகங்கள் தங்கள் அடையாளத்தையும், பங்களிப்பையும் அவுஸ்திரேலியாவில் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை உணர்த்துகின்றன.

இதுபோன்ற போராட்டங்கள் மீண்டும் நிகழாமல் இருக்க, அரசு மற்றும் சமூகத் தலைவர்கள் இணைந்து செயல்பட வேண்டியது அவசியம். இந்த உறுதியான நிலைப்பாடு, அவுஸ்திரேலியாவில் வாழும் இந்திய சமூகத்தினருக்கும், மற்ற புலம்பெயர்ந்தோருக்கும் ஓரளவு நிம்மதியை அளித்துள்ளது.

## முன்னாள்....

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டமைப்புக்களும் அவர்களினால் நன்மையடைந்த தரப்புகளும் இன்னும் அவ்வாறே உள்ளன. மகிந்தவை வழியனுப்ப சீனத்தூதுவர் சென்றமையும், மகிந்தவுக்கு வீடுகள் வழங்க சில தரப்புகள் முன்வந்தமையும், இவற்றுக்கு முன்னுரிமை வழங்கும் ஊடகங்களும் இதை நிரூபிக்கின்றன. இருந்தபோதும் நாட்டில் பெரும்பாலான மக்கள் தெளிவாகவே இருக்கின்றனர் என்பதே இப்போதைய அரசியல் யதார்த்தம். அந்தளவுக்கு முன்னைய அரசியல்வாதி கள் தொடர்பான வெறுப்பு மக்களிடத்தே இருப்பது மட்டுமன்றி அனுர தரப்பும் தம்மை அவர்களிலிருந்து வேறானவர்களாகக் காட்டுவதில் முனைப்புக் காட்டி வருவதுமாகும்.

இதன்காரணமாக அனுர அரசாங் கத்தின் மீதான மக்களின் அபிப்பிராயத் திலும் ஆதரவிலும் இத்தகைய நடவடிக்கைகளின் மூலம் எதிர்மறை யான தாக்கம் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை. அதனால் பெரும்பாலான மக்கள் இவற்றை வரவேற்பதாகவே தெரிகிறது. இதனால் தேசிய மக்கள் சக்தி இன்னும் வேகமாக இப்பாதையில் நடக்கும் என எதிர்வுகூற முடியும். ●

## பிரபாகரனின் கடைசி தருணம்:...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

மே 16 அன்று, இலங்கை ராணுவம் விடுதலைப் புலிகளின் கடைசி கட்ட பாதுகாப்பையும் அழித்தது. ஜி-11 மாநாட்டில் பங்கேற்றிருந்த நிலையில், இந்த செய்தியை அறிந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ, விடுதலைப் புலிகளை ராணுவம் வெற்றி கொண்டதாக முன் கூட்டியே அறிவித்தார்.

விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்கள் தலைவர் குமரன் பத்மநாதன் என்ற கேபி, கோலாலம்பூரில் அதே நாள், "சண்டை இறுதி கட்டத்தை எட்டிவிட்டது. எங்களது துப்பாக்கிகளை கைவிடுவதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்." என தெரிவித்தார்.

பிரபாகரன் இந்த சண்டையை தொடர முடிவெடுத்ததால், மஹிந்த ராஜபக்ஸவும் குமரன் பத்மநாதனும் இவ்வாறு பேசியதாக தெரிகிறது.

விடுதலைப் புலிகள் பல நாட்களாக குளிக்கக் கூட முடியாத அளவுக்கு சண்டை கடுமையானதாக இருந்தது. அவர்களுக்கான உணவுப் பொருட்கள் கிட்டத்தட்ட தீர்ந்துவிட்டன. விடுதலைப் புலிகளின் கொரில்லா படையினர் (எதிரிகள் மீது திடீர் தாக்குதல் நடத்துபவர்கள்) சிலர், இலங்கை படையினரால் பிடிக்கப்படக் கூடாது என்பதற்காக, தற்கொலை செய்துகொண்டனர்.

மே 17 அன்று இரவு, விடுதலைப் புலிகளின் கடைசிப் படைகளை 1600 சதுர மீட்டருக்குள் இலங்கை ராணுவம் நெருக்கியது. இலங்கை ராணுவம் மூன்று புறங்களில் சூழ்ந்திருந்தது. நான்காவது பக்கத்தில், இலங்கை கடற்படை தொடர்ந்து கண்காணித்து வந்த நந்திக்கடல் இருந்தது.

மே 17 அன்று விடுதலைப் புலிகளின் பல தளபதிகள் உட்பட 150க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதையடுத்து, அந்நாள் அந்த அமைப்புக்கு மிகவும் துரதிருஷ்டவசமான நாளாக அமைந்தது.

விடுதலைப் புலிகளின் கொரில்லா படையை சேர்ந்த 'எஸ்கே' பின்னொரு நாளில் அளித்த நேர்காணலில், "மே 17 அன்று கடைசியாக பிரபாகரன் உயிருடன் காணப்பட்டார். 6 மணிக்கு பிரபாகரன் இருந்த இடத்தை நான் அடைந்தேன். எங்களுடைய உணவு முழுவதும் தீர்ந்துவிட்டது" என்றார்.

"நம்பினால் நம்புங்கள், தமிழ் ஈழம் எனும் கனவு சிதைய போகிறது என்பதை உணர்ந்திருந்த போதிலும், பிரபாகரன் மிகவும் சாதாரணமாகவே காணப்பட்டார்."

அடுத்த நாள், மீதமுள்ள விடுதலைப் புலிகள், ராணுவ முற்றுகையை தகர்க்க முயற்சித்தனர். அதில் அவர்கள் வெற்றியடைந்தனர், ஆனால், 30 நிமிடங்களில் இலங்கை படையினர் மீண்டும் குழுக்களாக இணைந்தனர்.

இந்த முறை இலங்கை படையின் எதிர் தாக்குதலில், விடுதலைப் புலிகள் படையை சேர்ந்த தளபதிகள் பலரும் பிரபாகரனின் 24 வயது மகன் சார்லஸ் ஆண்டனியும் கொல்லப்பட்டார்.

ஆண்டனியின் உடலை இலங்கை படையினர் தேடியபோது, அவரிடம் 23 லட்சம் இலங்கை பணம் இருந்ததை கண்டறிந்தனர்.

53வது பிரிவின் படைத்தளபதியாக இருந்த கமல் குணரத்ன, அச்சமயத்தில் பிரபாகரன், கருணா அம்மான் (விநாயகமூர்த்தி முரளிதரன்) மற்றும் சூசை தவிர விடுதலைப் புலிகளின் தலைமை பொறுப்பில் இருந்த பலரும் அழிக்கப்பட்டதாக கூறினார்.

இலங்கை ராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, பிரபாகரன் குறித்த செய்தி வரும் வரை சண்டை தொடரும் என தெளிவாக கூறினார்.

**பிரபாகரன் மரணம் குறித்த செய்தியை பெற்ற குணரத்ன**

மே 19 அன்று வரை பிரபாகரன் எங்கிருக்கிறார் என்ற செய்தி மேஜர் குணரத்னவுக்கு சிறிதும் தெரியவில்லை. இதையடுத்து, நந்திக்கடல் பகுதியின் சேறு நிறைந்த உவர் நீரில் கடுமையான சண்டை வெடித்ததாக இளநிலை அதிகாரி ஒருவர் அவரிடம் தெரிவித்தார். விடுதலைப் புலிகளை சேர்ந்த பலரும் அங்கே சிக்கியிருந்தனர். அவர்களுள் யாரும் ஆயுதத்தைக் கைவிட தயாராக இல்லை.

இறுதியில் சண்டை முடிந்து ஒரு மணிநேரம் கழித்து, தான் காத்திருந்த செய்தி குணரத்னவுக்கு கிடைத்தது.

தன்னுடைய 'தி கேஜ், தி ஃபைட் ஃபார் சிறி லங்கா அண்ட் தி லாஸ்ட் டேஸ் ஆஃப் தமிழ் டைகர்ஸ்' (*The Cage, The Fight for Sri Lanka and the Last Days of the Tamil Tigers*) எனும் தன் புத்தகத்தில் கார்டன் வெய்ஸ், "கர்னல் ரவிப்ரியா மேஜர் ஜெனரல் குணரத்னவிடம், 'சார், நாங்கள் பிரபாகரனை கொலை செய்துவிட்டோம்'. என கூறினார்," என எழுதியுள்ளார்.

ஆச்சர்யமடைந்த குணரத்ன, 'உறுதியாக கூறுகிறீர்களா' என கேட்டதற்கு, "ஆமாம், உறுதியாக" என பதிலளித்துள்ளார்.

ஆனால், குணரத்ன இதனை உறுதியாக அறிய விரும்பியதால், கர்னல் லலிந்த கமகேவை சம்பவ இடத்துக்கு அனுப்பினார். சில நிமிடங்களிலேயே கமகேயின் குரல் ராணுவ தொலைபேசியில் ஒலித்தது: "சார், அது சரியான செய்திதான், பிரபாகரன் தான்." என தெரிவித்தார்.

**பிரபாகரனின் உடல் கண்டறியப்பட்டது**

முற்றிலும் உறுதிப்படுத்திய பின் குணரத்ன இந்த செய்தியை ராணுவ தளபதி ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு அனுப்பினார். அதற்கு முன்பு, பிரபாகரனின் உடலை கொண்டு வருமாறு படையினரை கேட்டுக்கொண்டார்.

எம்ஆர் நாராயண் சுவாமி எழுதுகையில், "அந்த சமயத்தில் இலங்கை படையினர் சுமார் மூவாயிரம் பேர் பிரபாகரனின் உடல் கிடத்தப்பட்டிருந்த இடத்தில் திரண்டிருந்தனர். சேறு நிறைந்த ஆழமற்ற நீரில் இறங்கி படையினர் உடலை வெளியே எடுத்தனர்." என குறிப்பிட்டுள்ளார்.

"பிரபாகரனின் உடலை படையினர் பார்த்த உடனேயே, அவர்கள் வானத்தை நோக்கி சுட ஆரம்பித்தனர். படையினரை ஒருங்குபடுத்த அதிகாரி முயற்சி மேற்கொண்டார், ஆனால் அவரின் வார்த்தைகளுக்கு பயனில்லாமல் போனது."

ஜெனரல் பொன்சேகா இந்த செய்தியை அறிந்தபோது இலங்கை நாடாளுமன்றத்தில் இருந்தார். பொன்சேகாவிடம் குணரத்ன சிங்கள மொழியில் தொலைபேசியில், 'மஹா எஸ் இவராய்' என்றார், அதாவது, 'பெரியவன் முடிந்து விட்டான்'.

**அடையாள அட்டை**

பிரபாகரன் சுமார் 9.15 மணியளவில் இறந்தார். அவருக்கு அப்போது வயது 54.

எம்ஆர் நாராயண் சுவாமி எழுதுகையில், "அவருடைய நெற்றியில் பெரிய காயம் இருந்தது, இதனால் அவருடைய தலை இரண்டு பாகங்களாக பிளவுபட்டிருந்தது. அவருடைய வாய் திறந்திருந்தது, அவருடைய கண் மேல் நோக்கி இருந்தது. அவருடைய தாடி வெள்ளை நிறத்தில் இருந்தது." என எழுதியுள்ளார்.

"குணரத்ன அவருடைய உடலை தொட்ட போது, அது இன்னும் சூடாக இருந்தது. அவருடைய நெற்றி தவிர வேறெங்கும் துப்பாக்கி குண்டு காயம் இல்லை. பிரபாகரன் அப்போது ராணுவ உடையில் இருந்தார். அவருடைய பாக்கெட்டில் தேடியபோது, 001 எனும் வரிசை எண்ணுடன் விடுதலைப் புலிகளின் அடையாள அட்டை கண்டறியப்பட்டது, அந்த அடையாள அட்டை ஜனவரி 1, 2007 அன்று வழங்கப்பட்டது."

இதுதவிர, நீரிழிவு மருந்துகள் சிலவும் கண்டறியப்பட்டன. சிங்கப்பூரிலிருந்து வாங்கப்பட்ட திராட்சை மணத்துடன் கூடிய லோஷனும் இருந்தது. அவரின் தலையில் இருந்த காயம் நீல நிற துணியால் மூடப்பட்டிருந்தது.

கார்டன் வெய்ஸ் எழுதுகையில், "12.7 எம்எம் தோட்டாவால் பிரபாகரன் கொல்லப்பட்டதாக ராணுவ அதிகாரி ஒருவர் என்னிடம் தெரிவித்தார்." என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை ராணுவத்தின் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா, பிரபாகரனின் ராணுவ உடையை கழற்றுமாறு உத்தரவிட்டார். இலங்கை படையினரை தவிர, ராணுவ உடையணிய யாருக்கும் உரிமை இல்லை என்பது அவரின் வாதமாக இருந்தது.

**பிரபாகரனின் உடல் அடையாளம் காணப்பட்டது**

நாராயண் சுவாமி எழுதுகையில், "பிரபாகரனின் உடலை அடையாளம் காண கர்னல் கருணா மற்றும் தயா மாஸ்டர் எனும் விடுதலைப் புலிகளின் முன்னாள் தலைவர்களை அனுப்புவதாக பொன்சேகா குணரத்னேவிடம் தெரிவித்தார்." என குறிப்பிட்டுள்ளார்.

"இருவரும் ராணுவ விமானத்தில் அழைத்து செல்லப்பட்டனர். அந்த உயிரற்ற உடலை அடையாளம் காண அவர்கள் ஒரு நொடி கூட எடுத்துக்கொள்ளவில்லை."

பிரபாகரனின் மரணத்தால் தமிழ் ஈழத்துக்கான ஆயுத போராட்டமும் இலங்கையில் பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டுப் போரும் முடிவுக்கு வந்தன.

(15 செப்ரெம்பர் 2025- பிபிசி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா.பொதுச்...

அரச தலைவராக தனது முதல் ஐ.நா. பொதுச் சபை உரையில், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இலங்கையின் மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரல், பொருளாதார மறுமலர்ச்சி முயற்சிகள் மற்றும் காலநிலை நடவடிக்கை, நிலையான வளர்ச்சி மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு உள்ளிட்ட உலகளாவிய பிரச்னைகள் குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சுட்டிக்காட்டுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## இரு மாகாண...

எல்லோரும் கோரிக்கை விடுகின்ற இச்சந்தர்ப்பத்தில் அதிகாரப் பரவலாக்களின் ஊடாக மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்று இந்தியாவும் ஐ.நா. சபையில் கோரிக்கையை முன்வைத்துள்ளது. இதேவேளை, மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என்றால் எல்லாக் கட்சிகளும் ஒன்றிணைந்து குறித்த தேர்தலில் பங்கு கொள்ளவேண்டும் என்று இந்தியத் தூதுவரும் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

குறித்த விடயத்தை ஒரு நியாயமான விடயமாக நான் பார்க்கின்றேன். எங்களைப் பொறுத்தவரை ஒற்றுமை இல்லாமை என்பதனை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் நாங்கள் அனுபவித்திருந்தோம். குறிப்பாக எமது ஒற்றுமை இன்மை காரணமாக தமிழ் மக்கள் விரக்தியுடன் இருப்பதுடன் ஒற்றுமையான சூழலை எதிர்பார்த்து இருக்கின்றனர். இதன் காரணமாகவே மக்கள் யாருக்கு வாக்கு போடுவது என்ற குழப்பத்தில் இருந்தனர். மேலும் இவ் ஒற்றுமை இன்மையினாலேயே புதிய நபரை-புதிய அரசை தெரிவு செய்ய வேண்டும் என்ற ரீதியில் பாராளுமன்ற தேர்தலில் மக்கள் வாக்களித்திருந்தனர்.

இதன் காராணமாகவே முன் எப்போதும் இல்லாத வகையில் வடக்கு-கிழக்கு பகுதிகளில் தேசியக் கட்சிகளின் பிரதிநிதித்துவம் உருவாகியது. இதை ஒரு செய்தியாகவே நாம் பார்க்க வேண்டும்.

குறிப்பாக எமது செயற்பாடுகள் வெறுமனவே பேச்சளவில் காணப்படுமேயானால் எமது மாகாண சபை நிச்சயமாக மாற்று கட்சிகளின் அதிகாரங்களுக்குள் செல்கின்ற வாய்ப்பு ஏற்படும் பட்சத்தில் தமிழ்த் தேசியத்தைப் பற்றி பேசுகின்ற தமிழ்க் கட்சிகள் அத்தோடு கடையை மூடிவிட்டுச் செல்லும் நிலை ஏற்படும்.

எங்கள் மக்களுடைய எதிர்காலம், இனப்பிரச்னை, எமது மண் பறிபோகாமல் இருக்கவேண்டும் என்றால் அதற்காக போராட வேண்டும். எனவே அதற்கு நாங்கள் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதே எனது கோரிக்கையாக இருக்கின்றது. அத்தோடு அதற்காக நாங்கள் தொடர்ந்தும் உழைத்து வருகின்றோம் என்றாலும் அதற்கான சந்தர்ப்பம் எட்டப்படவில்லை.

ஐ.நாவுக்கு கடிதம் எழுதும்போதோ அல்லது ஐ.நாவுக்கு கையொப்பம் இடுகின்ற சந்தர்ப்பத்தின்போதோ ஒற்றுமையாக இருக்கின்ற தமிழ்க் கட்சிகள், தேர்தல் காலத்தில் மாத்திரம் ஒற்றுமையாக இருக்காமல் பிரிந்து செல்லும் அபாய நிலை இருக்கின்றது. எனவே ஒற்றுமையாக மக்களின் எதிர்பார்ப்பை நிறைவு செய்யுக் கட்சிகளாக இருக்க வேண்டும்.

என்னைப் பொறுத்த வரை எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுகின்ற சூழலை எதிர்பார்க்கின்றோம். தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற கட்சிகளை ஒற்றுமைப்படுத்துதல் என்ற ரீதியில் நிச்சயமாக தமிழ் அரசுக் கட்சியுடன் பேச்சு நடத்துவதற்கு தயாராக இருக்கின்றோம். குறிப்பாக இந்த மாகாண சபையில் அவர்களையும் இணைத்துக் கொண்டு பயணிப்பது என்பதுதான் சாலச்சிறந்ததாகும்-என்றார். (அ)

## திலீபனின்...

நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபன் நினைவாலயம் முன்றலில் நேற்று சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மாவீரர் பெற்றோர்கள் மற்றும் முன்னாள் போராளிகளின் பங்கேற்புடன் இது திறந்து வைக்கப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் பிரதான தூபி முன்றலில் மலரஞ்சலி செலுத்தப்பட்டு வரலாற்று ஆவணக் காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.

ஆவண காட்சியகத்தில் தியாக தீபம் திலீபனின் திருவுருவச் சிலையை மூத்த போராளி பஷீர் காக்கா திரை நீக்கம் செய்து வைத்ததுடன் சுடரேற்றி மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

தியாக தீபம் திலீபனின் வரலாற்று புகைப்படங்கள், பத்திரிகை ஆவணங்கள் என்பன தொகுக்கப்பட்டு காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

இதன்போது மாவீரர்களின் பெற்றோர், அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத்தினர், பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டனர். (அ)

## ஐ.தே.க.வுக்கான...

வழங்கிய சிலோன் தேசிய காங்கிரஸிலிருந்து பெற்ற அனுபவத்தின் மூலம் டி.எஸ். சேனநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியை நிறுவியதாக அவர் நினைவு படுத்தியிருந்தார்.

பல்வேறு சமூகங்களை ஒன்றிணைத்து ஒரு பொதுவான தேசிய இலக்கை நோக்கிச் செயல்பட ஐக்கிய தேசியக் கட்சி முயற்சித்ததாக சஜித் வலியுறுத்தினார். (அ)

## ராஜபக்ஷ...

பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"விளக்கேற்றிய பின்னர் அவ்விளக்கின் வெளிச்சம் ஒரு கட்டத்தில் பிரகாசமாக தென்படும். அதாவது விளக்கு அணையப்போகின்றது என்பதே அதன் அர்த்தம். எனவே, அரசியல் ரீதியில் ராஜபக்ஷக்களின் கதை முடிந்துவிட்டது.

இலங்கையில் இனி அந்த பழைய கலாசாரத்துக்கு இடமில்லை. தற்போது சிறப்பாக இருக்கின்ற அரசியல் கலாசாரத்தைவிட சிறந்த ஒன்று வந்தால் மக்கள் ஆதரிப்பார்கள்.

அரசியல்வாதிகளின் சொத்து விவரம் இதுவரை வெளிவராமல்தான் இருந்தது. அவற்றைக்கூட வெளியிடுவதற்கு நாமே நடவடிக்கை எடுத்தோம். அரசியலில் ஈடுபடும் அனைவரும் கள்வர்கள் அல்லர்.

எவரேனும் முறையற்ற விதத்தில் சொத்து திரட்டி இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். சட்டம் தற்போது அனைவருக்கும் சமம் என்ற வகையில் அமுலாகி வருகின்றது." - எனவும் அமைச்சர் லால்காந்த மேலும் குறிப்பிட்டார். (அ)

## அரசாங்க...

பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

25 பஸ் நிலையங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்வில் பங்கேற்ற வேளை அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிர்வரும் ஜனவரி மாதம், அனைத்து அரச ஊழியர்களுக்கும், ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க சம்பள உயர்வை வழங்குவார்.

பஸ் நிலையங்களில் அதிகமாக வேலை செய்பவர்களுக்கு, அதிக ஊதியம் வழங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இந்த நிறுவனங்கள், மக்களுக்கு முழுமையாக சேவை செய்யும் திறமையான நிறுவனங்களாக மாற்றப்பட வேண்டும் - என்றார். (அ)

## நிகழ்நிலை...

வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது-

பலரதும் விமர்சனத்துக்கு உள்ளான 2024 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க நிகழ்நிலைக் காப்புச் சட்டம் தொடர்பில் திருத்த முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. அதன் பிரகாரம் எமது திருத்தப் பரிந்துரைகளை கடந்த 12 ஆம் திகதி சமர்ப்பித்தோம். அதன்பிரகாரம் தற்போது நடைமுறையில் உள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை நீக்குமாறும் அல்லது சகல தரப்பினரதும் பங்கேற்புடன் சர்வதேச மனித உரிமைகள் சட்டக் கடப்பாடுகளுக்கு அமைவாக அச்சட்டத்தைத் திருத்தியமைக்குமாறும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் நடைமுறைக்கு வந்த இச்சட்டமானது ஏற்கனவே உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளைப் புறந்தள்ளும் வகையிலும், சிவில் செயற்பாடுகளுக்கான இடைவெளியை மேலும் சுருங்கச் செய்யும் விதத்திலும் அமைந்திருக்கிறது. இச்சட்டம் கடந்த வருடம் முதல் நடைமுறைக்கு வந்ததிலிருந்து மேற்குறிப்பிட்ட மனித உரிமைகள்சார் அச்சுறுத்தல்களும் உண்மையில் அரங்கேறியிருக்கின்றன.

அரசியல்வாதி ஒருவரின் வழிகாட்டலுக்கு அமைவாக அரசாங்கத்திற்கு எதிராக இணையவெளியில் பிரசாரங்களை முன்னெடுத்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு 2024 பெப்ரவரி மாதம் முதன்முறையாக நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின்கீழ் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

இவ்வாறானதொரு பின்னணியில் நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள மட்டு மீறிய அதிகாரங்கள் மற்றும் அதற்கான உறுப்பினர் நியமன முறை, இச்சட்டத்தின்கீழ் குற்றங்களாக வரையறுக்கப்படும் விடயங்களின் பரந்துபட்ட தன்மை, பொருத்தமற்ற தண்டனைகள் மற்றும் தடைகள், போதிய நீதிமன்ற மேற்பார்வையின்மை, மாற்றுப்பாலினத்தவர்கள் மீதான மிகையான தாக்கங்கள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படவேண்டும் என எமது பரிந்துரைகளில் வலியுறுத்தியுள்ளோம் - என்றுள்ளது. (அ)

## ஜனாதிபதி...

வெளியாகியுள்ளது.

பிரமுகர்கள் கலந்து கொள்ளும் நிகழ்வுகளுக்கு முப் படையினர், பொலிஸார் போன்ற பல்வேறு சீருடை களை அணிந்திருப்பவர்கள் தொடர்பிலும், அதிக கவ னம் செலுத்தி ஆய்வு செய்ய வேண்டும் என பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் இந்த உத்தரவை ஒரு சிறப்பு சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

அதற்கமைய, அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள், பிரிவு அதிகாரிகள், உதவிப் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் தலைமை பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வன்முறையாளர் ஒருவர் இராணுவ மற்றும் பொலிஸ் சீருடை அணிந்து வந்து குற்றம் செய்ய வாய்ப்புள்ளதாகவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பண்டிகை நிகழ்வுகள் மற்றும் போக்குவரத்துக் கட்டுப்பாடு மற்றும் சுகாதாரம் போன்ற பிற அத்தியாவசிய நடவடிக்கைகளுக்கான பாதுகாப்பை முன்கூட்டியே அடையாளம் காண்பது அவசியம் என்றும் கூறப்பட்டுள்ளது.

மேலும், விசேட பிரமுகர்கள் பாதுகாப்புப் பணிகளுக்காக பணியில் அமர்த்தப்பட்டுள்ள அதிகாரிகளை அடையாளம் கண்டு வேறுபடுத்துவதற்காக வெளியிடப்படும் வெவ்வேறு வண்ணக் கைப்பட்டிகள், பதாகைகள் அல்லது பிற சின்னங்கள் போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. (அ)

## கொழும்புத்...

தொடர்பாக யாழ்ப்பாணம் பொலீஸ் குற்றத் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப் படையில் நீண்ட நாட்களாக போதை மாத்திரை வியாபாரத்தில் ஈடுபட்ட மூவர் நேற்று யாழ்ப்பாணம் பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்பு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது 180 போதை மாத்திரைகளுடன் 18, 24 ,22 வயதுடைய 03 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்

கைது செய்யப்பட்டவர்கள் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையை சேர்ந்த மூன்று இளைஞர்களாவர்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை யாழ்ப்பாணம் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

## அனைத்து...

எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டிய தருணம் இது. என்னைக் கைது செய்வதன் ஊடாக எதிர்க்கட்சியினரை அச்சுறுத்தப் பார்க்கின்றனர். இதற்கு நாம் அச்சப்படக் கூடாது.

நான் ஜனாதிபதிப் பதவியில் இருந்த காலத்தில் எனது மனைவியான பேராசிரியர் மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்வதற்காக இலண்டனுக்குத் தனிப்பட்ட விஜயம் செய்தமைக்காக அரச நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாக என் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. ஆனால்,நான் இலண்டன் சென்றது உத்தியோகபூர்வ பயணம் ஆகும். இதனை நான் நிரூபித்தும் அவர்கள் என்னைக் கைது செய்தனர்.

அழைப்பிதழைக் காண்பித்தும் அவர்கள் என்னை விளக்கமறியலில் வைத்தனர்.

ஆனால், எனக்காக அனைத்து எதிர்க்கட்சிகளும் அரசியல்வாதிகளும் மக்களும் ஒன்றிணைந்தனர். எனக்குத் துணையாக இருந்த அனைவருக்கும் நன்றி.

ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு நாங்கள் எதிர்ப்புத் தெரிவிப்பதில்லை.

ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முதலில் ஆரம்பித்தது நாங்கள் தான்.

ஆனால், போலிக் குற்றச்சாட்டுக்களின் கீழ் மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்ய நாங்கள் விடமாட்டோம். அதற்கு எதிராக நாங்கள் போராடுவோம்.

நாங்கள் பயப்படவில்லை. நாங்கள் பயந்து ஒதுங்குவோம் என்று அவர்கள் நினைத்தார்கள்.

மோசடியான முறையில் அரசியல் தலைவர்களைக் கைது செய்ய முயன்றால் நாங்கள் ஒன்றிணைந்து அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போம்.

எந்தவொரு சவால்களுக்கும் முகம் கொடுக்க நாங்கள் தயார் - என்றார். (அ)

## சொத்து...

எதிர்க்கட்சித் தலைவரால் இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் குறித்த விவரங்களை கடந்த ஏப்ரல் 23ஆம் திகதி பாராளுமன்றச் செயலாளர் நாயகத்திடம் சமர்ப்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்திருந்தது.

பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினால் அந்த விவரங்கள் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும் அவற்றை டிஜிற்றல் வடிவத்தில் சமர்ப்பிக்குமாறு எதிர்க்கட்சித் தலைவருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமையவே அதற்காக கால அவகாசத்தை வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் இலஞ்ச, ஊழல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மகனை கொலை செய்த தந்தை! கேகாலை பகுதியில் பயங்கரம்!!

கொழும்பு, செப். 21


தேவாலேகம பொலிஸ் பிரிவின் பட்டுவத்த பகுதியில் நேற்று முன் தினம் இரவு, குடும்பத் தகராறு காரணமாக ஒருவர் தனது மனைவி மற்றும் மகனைத் தாக்கியதில், 35 வயதுடைய மகன் உயிரிழந்துள்ளார்.

தாக்குதலில் காயமடைந்த மனைவி கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தேவாலேகம பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலையடுத்து, இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயிரிழந்தவர் பட்டுவத்த, ஹெலமட பகுதியைச் சேர்ந்தவராவார். பொல்லால் தாக்கியதில் குறித்த நபர் உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை தேவாலேகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உலக சமாதான தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் நேற்று நடைபவனி



கிளிநொச்சி, செப். 21

உலக சமாதான தினத்தை முன்னிட்டு, நல்லிணக்க சமாதானத்தை வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்று நடைபவனி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

தந்தை செல்வா அறக்கட்டளையின் ஏற்பாட்டில், அமைதியான சூழலை உருவாக்க ஒன்றுபடுவோம் என்ற தொனிப்பொருளில் கிளிநொச்சி கரடிப்போக்கு சந்தியிலிருந்து கிளிநொச்சி மத்திய பஸ் நிலையம் வரை குறித்த நடைபவனி முன்கெடுக்கப்பட்டது. நடைபவனியில் சர்வ மதத் தலைவர்கள், இளைஞர் யுவதிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (அ)

# இ.போ.ச. வீழ்ச்சியைக் கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு அவசியம்

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க

கொழும்பு, செப். 21

இலங்கை போக்குவரத்து சபை வீழ்ச்சியடைந்தமைக்கான காரணத்தை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலங்கம பஸ் சாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர்-

இலங்கை போக்குவரத்து சபை இப்படி வீழ்ச்சியடைந்தமைக்கு என்ன காரணம் என்பதை கண்டறிய ஜனாதிபதி ஆணைக்குழு உருவாக்கப்படவேண்டும். ஒரு சாதாரண மூளையைக் கொண்டு ஒரு நிறுவனத்தை இவ்வாறு வீணடிக்க முடியாது.

இலங்கை போக்குவரத்துச் சபையை அழிவுக்கு கொண்டுச் சென்ற செயற்பாடு ஒரே தடவையில் இடம்பெறவில்லை. காலம் காலமாக இடம்பெற்றதன் காரணமாக இதன் ஊடாக பல ஊழியர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த வருடம் செப்ரெம்பர் 21 மக்கள் வழங்கிய செய்தி என்ன? மாற்றம் பெறவேண்டும் என்பதுதான். பழைய முறைமையில் எங்களால் பயணிக்க முடியாது.

இனியும் இலங்கை போக்குவரத்துச் சபை அழிவுப் பாதையில் செல்வதை பார்த்துக்கொண்டிருக்க முடியாது. ஜனாதிபதி அநுரகுமாரவின் அரசாங்கம் என்ற வகையில் நாங்கள் இனி அதை பாதுகாக்கிறோம் - என்றார். (அ)

# மகா கூட்டணி ஒன்று விரைவிலே மலரும்!

## ஐ.தே.க. விழாவில் மனோ கணேசன்



கொழும்பு, செப். 21

**"ஜனநாயக ரீதியில் மகா கூட்டணியொன்றை உருவாக்குவதற்கு முற்படுகின்றோம். அதனை நாம் செய்வோம். இது கள்வர்களின் கூட்டணி அல்ல."**

- இவ்வாறு தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் 79 ஆவது ஆண்டு விழாவில் நேற்று பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

"எதிரணிகள் ஒன்றிணைவதற்கு முற்படும்போது கள்வர்கள் ஒன்றிணைகின்றனர் என ஆளுந்தரப்பில் குற்றஞ்சாட்டப்படுகின்றது. இதனை முற்றாக நிராகரிக்கின்றோம். இங்கு களவு, மோசடிகளுக்கு இடமில்லை. எனவே, அனைவரும் கள்வர்கள் எனக் கூறுவதை ஆளுங்கட்சி நிறுத்த வேண்டும்.

கள்வர்களைப் பிடிக்கவேண்டும், அவர்களுக்கு எதிராக சட்ட ரீதியிலான நடவடிக்கை வேண்டும். இதில் மாற்று கருத்துக்கு இடமில்லை. இது தொடர்பான நடவடிக்கைகள் சட்டபூர்வமாகவே இடம்பெறவேண்டும். கள்வர்கள் யாரென்பதை நீதிமன்றம் தீர்மானிக்கட்டும்."-எனவும் மனோ கணேசன் குறிப்பிட்டார். (அ)

# இலங்கையில் முதலீடு; இந்தோனேஷியா ஆர்வம்

கொழும்பு, செப். 21

இலங்கையில் சுமார் 100 மில்லியன் ரூபாய் மதிப்பிலான முதலீட்டுத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு இந்தோனேஷியா அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

இலங்கை அரசுடன் இணைந்து வலுவான செயல் திட்டங்களை முன்னெடுத்து, எதிர்காலத்தில் சிறந்த முதலீட்டு பங்குதாரராக விளங்கும் விருப்பத்தையும் இந்தோனேஷியா தெரிவித்துள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன் தினம் மேல் மாகாண ஆளுநர் செயலகத்தில் இடம்பெற்றது. இதில் இலங்கைக்கான இந்தோனேஷிய தூதுவர் மற்றும் மேல் மாகாண ஆளுநர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சீனா செல்லும் இலங்கை அணியின் தலைமை அதிகாரியாக ராஜசீலன்!





யாழ்ப்பாணம், செப். 21

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தின் உடற்கல்வித் துறை பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ.ராஜசீலன் சீனாவில் நடைபெறவுள்ள 16 வயதுக்குட்பட்ட சர்வதேச உதைபந்தாட்ட போட்டிக்கான இலங்கை அணியின் தலைமை அதிகாரியாக கல்வி மற்றும் விளையாட்டு அமைச்சினால் நியமனம் செய்யப்பட்டு சீனா பயணமாகி றார்.

இவர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதுடன் கல்வி,விளையாட்டுத் துறையில் உடற்கல்வி ஆசிரியராக, ஆசிரிய ஆலோசகராக, அதிபராக, உதவி,பிரதி கல்விப் பணிப்பாளராக கடமையாற்றியுள்ளதுடன் கிரிக்கெட், உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம், எல்லே விளையாட்டுக்களில் சிறந்த வீரராக திகழ்ந்ததுடன், மெய்வமை விளையாட்டுக்களில் முப்பாய்ச்சல், நீளம் பாய்தல் போட்டிகளில் நீண்ட காலமாக சாதனையாளராக திகழ்ந்தவர்.

விளையாட்டு விழாக்களை சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்துவதில் திறமையானவராகவும், வட மாகாண விளையாட்டுத் துறையை வளர்த்தெடுப்பதில் முக்கிய பங்காற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சுய விருப்பில் சேவையில் இருந்து விலகுவதற்கு இணங்கவேண்டாம்!

## மின்சார சபை ஊழியர்களிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை




கொழும்பு, செப். 21

அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள சுயவிருப்பில் சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவுக்கு இணங்கவேண்டாம் என்று மின்சார சபை ஊழியர்களைக் கேட்டுக் கொள்வதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

மின்சார சபையிலுள்ள பிரச்னைகளுக்கு ஜனாதிபதி தலையிட்டு தீர்வை வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜனாதிபதியின் உரையிலிருந்து அந்த எதிர்பார்ப்பும் பிரயோசனமற்றது என்பது தெளிவாகியுள்ளது.

மக்கள் மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் தலைவராக ஜனாதிபதி பொறுப்புடன் பேசியிருக்கவேண்டும். மாறாக நிறைவேற்றிகாரத்தின் உச்சத்திலுள்ள அவர் மின்சார சபை ஊழியர்களை மறுசீரமைப்பை ஏற்றுக் கொள்ள முடியாவிட்டால் சேவையிலிருந்து விலகிக் கொள்ளுமாறு கூறுகின்றார்.

ஊழியர்களுடன் எந்தவொரு பேச்சுக்களை முன்னெடுக்காது, அவர்களுடன் கலந்தாலோசிக்காது மறுசீரமைப்பை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளது. கடந்த அரசாங்கத்தில் மின்சார சபை மறுசீரமைப்பிற்கான சட்ட மூலம் முன்வைக்கப்பட்டது.

அந்த சட்ட மூலத்தை இரத்து செய்து பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என தேர்தல் காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார வாக்குறுதியளித்திருந்தார். ஆனால் முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜேசேகராவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அதே சட்டத்தையே வரையறுக்கப்பட்ட சில திருத்தங்களுடன் இந்த அரசாங்கமும் சமர்ப்பித்திருக்கிறது.

எவ்வாறிருப்பினும் இந்த அச்சுறுத்தல்களுக்கு அஞ்ச வேண்டாம். அரசாங்கம் பரிந்துரைத்துள்ள சேவையிலிருந்து விலகுவதற்கான தெரிவுக்கு இணங்கவேண்டாம் என்று மின்சாரசபை ஊழியர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org